# வருடாந்த அறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

# 2023

IHRA
UNIVERSITY OF COLOMBO

மனித வள மேம்பாட்டு நிறுவகம்

கொழும்பு பல்கலைக்கழகம்

# வருடாந்த அறிக்கை
# மற்றும்
# வருடாந்த நிதிக் கூற்றுக்கள்
# 2023

ISBN 978-624-5467-08-2

© மனித வள மேம்பாட்டு நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்

Cover page designed and desktop publishing by NACN Nishshanka
Printed by

# நோக்கு, செயற்பணி மற்றும் விழுமியங்கள்




## நோக்கு

உலகளாவிய சூழலில் முற்போக்கான சமூகத்தின் அபிவிருத்திக்கான மனித வளங்களை வலுப்படுத்துவதற்குரிய கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மையமாகத் திகழ்தல்.

## செயற்பணி

மனித வள மேம்பாட்டிற்கான தலைமைத்துவத் திறன் வளர்ச்சி, தொழிற்திறன், உயர் சமூக நெறிமுறை மற்றும் தரநிலைகளுடன் கூடிய விமர்சன சிந்தனைகளைக் குறிக்கோளாகக் கொண்டு அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் முறைகளினூடாகவும் திறமையும் அர்ப்பணிப்பும் கொண்ட பணியாளர்களினூடாகவும் மேலாண்மை, மேலாண்மை சாராத ஊழியர்கள் மற்றும் தொழில்முனைவோரின் பல்வேறு குழுக்களிற்கு தேசிய மட்டத்தில் போட்டியிடக்கூடியதும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படக் கூடியதுமான கற்றல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்களை வழங்குதல்.

### விழுமியம் 01

**கல்விச் சுதந்திரம்**

முறையான உயர் கல்வி வாய்ப்புக்கள் தடைப்பட்ட முகாமையாளர்கள் அல்லாத ஊழியர்களிற்கு இலவசக் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போன முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், மற்றும் தொழில் வாண்மையாளர்களின் வளர்ச்சியையும் பாராட்டுதல்.

### விழுமியம் 02

**வளர்ச்சிச் சிந்தனை**

சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் ஒருவருக்கொருவர் ஒன்றிணைந்து மிகுந்த அர்ப்பணிப்புடன் தமது பணிளைச் செய்வதும் தமது கூட்டு முயற்சிகளின் பலன்களை நியாயமாகவும் நிலையானதாகவும் பகிர்ந்து கொள்வதன் மூலம் மனித வள மேம்பாட்டு நிறுவகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர் கால சந்ததியினரிற்காக தாம் எட்டியதைப் பராமரித்து மேம்படுத்துதல.

### விழுமியம் 03

**பன்முகத் தன்மை மற்றும் உள்ளடக்கம்**

நாம் பன்முகத் தன்மையை மதிப்பது மட்டுமல்லாது எமது விழுமியங்கள், நம்பிக்கைகள், பின்னணிகள், திறன்கள் மற்றும் சேவை நோக்கு நிலைகளிலுள்ள வேறுபாடுகளை ஏற்றுக்கொள்வதும், ஊக்குவிப்பதுமான பணிக்கலாச்சாரத்தை மதிப்பதன் மூலம் எமது நிறுவகமும் சமூகமும் பன்முகத்தன்மையிலிருந்து பயனடைவதையும் உறுதி செய்தல்.

### விழுமியம் 04

**சமுதாயத்தின் வாழ்க்கைத் தரம்**

ஒன்றுபட்ட அபிலாசைகளை அடைவதற்காக, ஒரே இலக்கை மனதிற்கொண்டு ஒன்றுபட்ட சமூகமாக, நான் அல்ல நாம் என்ற குணங்களை உருவாக்கக் கூடிய பொதுவான அபிலாசைகளை கொண்ட ஒரு மனித சமூகமாக மாறுவதற்கான முயற்சிகளைப் பாராட்டுதல்.

### விழுமியம் 05

**நம்முடைய செயலைப் பகிர்ந்து கொள்வது**

மனித வள மேம்பாட்டு நிறுவகச் சமூகத்தினதும் அதன் சார்பாகவுள்ள சமூகத்தினதும் நெறியியல் நடத்தைகளை உறுதி செய்வதோடு உயர் கல்வியை வழங்கும் ஒரு நிறுவகத்தால் பராமரிக்கப்பட வேண்டிய இரகசியத் தன்மையை உறுதி செய்வதன் மூலம் அறிவு மற்றும் தகவல்களைத் திரட்டும் கட்டுப்பாடற்ற உரிமையைப் பராமரிப்பதை நாம் மிகவும் மதிக்கின்றோம்.



# பணிப்பாளரின் செய்தி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் பணிப்பாளராக 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். ஆராய்ச்சி, மற்றும் கற்பித்தலில் சிறந்து விளங்குவதற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு இந்த ஆண்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. எமது கூட்டு முயற்சிகள் மனித வள முன்னேற்றத்தின் தரங்களை உயர்த்தியது மட்டுமல்லாது இலங்கையின் முன்னணி நிறுவகமாக எமது நிலையை வலுப்படுத்தியுமுள்ளது.

2023 ஆம் ஆண்டில் எமது சமூகத்தின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மனித வள மேம்பாட்டு நிறுவகம் தனது கல்விசார் திட்டங்களைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி அவை சமகால சமூகத்தின் தேவைகளிற்கு ஏற்ப பொருத்தமானதாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக ஏற்கெனவே உள்ளவற்றை மேம்படுத்தியது. தொழில் முகாமைத்துவ இளமாணி கற்கை நெறி மற்றும் தொழில் முகாமைத்துவ சிறப்பு இளமாணி கற்கை நெறி என்பன நிறுவகத்தின் முக்கிய பட்டப் படிப்புகளாகும். இவற்றுடன் சமகால சமூகத்தின் தேவைகளிற்கு ஏற்ப எமது இளமாணித் திட்டங்களுடன் சமகாலத் தலைப்புக்களை இணைத்து இக் கற்கை நெறிகள் மேம்படுத்தப்பட்டன.

உளவியல் ஆலோசனையில் பட்டப்பின் டிப்ளோமா: உளவியலின் முக்கியத்துவம் சமூகத்தில் அதிகம் புரிந்து கொள்ளப்பட்டு வருவதனால், இந்தப் பாடத்திட்டத்திற்கான தேவை மாணவர்களிடையே அதிகரித்துள்ளது. இதனால் இப்பாடநெறிக்கான மாணவர் சேர்க்கையும் அதிகரித்துள்ளது. சுற்றுலா, நிகழ்வு மற்றும் விருந்தோம்பல் முகாமை தொடர்பான நிர்வாக டிப்ளோமா: இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் எழுச்சிபெற்றுவருவதனால் இம் மாறி வரும் துறையை வழிநடத்தவும் புத்தாக்கப்படுத்தவும் தொழில் வாண்மையாளர்களைப் பயிற்றுவிப்பதில் சுற்றுலா, நிகழ்வு மற்றும் விருந்தோம்பல் முகாமை தொடர்பான நிர்வாக டிப்ளோமா திட்டம் முக்கியமானதாகின்றது.

2023/2024 கல்வியாண்டின் தொடக்கத்திலிருந்து மே மாதம் 24 ஆம் திகதி வரை 4,800 புதிய மாணவர்கள். அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இப் பன்முகத்தன்மை கொண்ட குழு கல்விச் சமூகத்தை வளப்படுத்தும் ஏராளமான அனுபவங்களையும் முன்னோக்குகளையும் கொண்டு வருகின்றது. அத்துடன் அவர்களின் கல்விசார்ந்த முயற்சிகள் மற்றும் கற்கை நெறிகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் அவர்களின் உற்சாகமும், அர்ப்பணிப்பும் தெளிவாகத் தெரிகின்றது.

ஏழாவது டிப்ளோமா பட்ட விருது வழங்கும் வைபவம் பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

இதன்போது நிறைவேற்று உயர் மற்றும் சாதாரண டிப்ளோமா கற்கை நெறிப் பட்டங்கள் உட்பட 545 பட்டங்கள் வழங்கப்பட்டன. இது எமது மாணவர்களின் கடின உழைப்பிற்கும் விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பிற்கும் சான்றாக அமைகின்றது.

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் நோக்கத்தின் அடிக்கல்லாக ஆராய்ச்சி உள்ளது. 2023 ஆம் ஆண்டு முகாமைத்துவ, தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்கள் பற்றிய 4 வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இம் மாநாடு புகழ் பெற்ற அறிஞர்கள், பயிற்சியாளர்கள், மற்றும் மாணவர்களிற்கு அவர்களின் மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப நுண்ணறிவுகளையும் முன்னேற்றங்களையும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளத்தை வழங்கியது. விவாதிக்கப்பட்ட பன்முகத்தன்மை வாய்ந்த தலைப்புக்கள், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்கள் மூலமாக சமகால சவால்களை எதிர் கொள்வதற்கான எமது உறுதிப் பாட்டைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இன்றைய உலகமயமாக்கப்பட்ட உலகில் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு மனித வள மேம்பாட்டு நிறுவகம் மொழி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. உதாரணமாக 2023ஆம் ஆண்டு நிறுவகத்தின் ஜப்பானிய அலகால் **"ஜப்பான்தினம்"** கொண்டாடப்பட்டது இதில் இடம் பெற்ற பேச்சுப் போட்டி எமது மாணவர்களின் மொழித் திறன் மற்றும் கலாச்சார புரிதலை முன்னிலைப்படுத்துகின்றது. இத்தகைய நிகழ்வுகள் கலாச்சார உரையாடல்களை வளர்ப்பதுடன் எமது மாணவர்களை சர்வதேச ஈடுபாடுகளுக்கும் தயார்ப்படுத்துகின்றன.

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முன்னோக்கிய பார்வையில், மனித வள மேம்பாட்டு நிறுவகமானது இலங்கையிலும் அதற்கு அப்பாலும் மனித வள மேம்பாட்டை முன்னேற்றுவதற்கான அதன் நோக்கத்தை மேலும் மேம்படுத்தத் தயாராக உள்ளது. அத்துடன் புதியசமூகத் தேவைகளிற்கேற்பவும், வளர்ந்து வரும் தொழிற் துறை போக்குகளுடன் ஒத்துப்போகும்வகையிலும் கற்கைநெறிகள் மற்றும் கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல், ஆராய்ச்சி முயற்சிகளை வலுப்படுத்துதல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல், மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையிலான ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை ஊட்டிவளர்த்தல், தொழில் கூட்டுறவுகளை மேம்படுத்துதல், மாணவர்களிற்கு நடைமுறை அனுபவத்தையும் வேலை வாய்ப்புக்களையும் வழங்கக்கூடிய தொழிற் துறைத் தலைவர்களுடன் ஒத்துழைத்தல், வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவித்தல், வேகமாகமாறி வரும் உலகில் தமது திறன்களை மேம்படுத்த விரும்பும் தொழில் வாண்மையாளர்களை இலக்காகக் கொண்ட குறுகிய கால கற்கைநெறி மற்றும் பயிற்சிப் பட்டறைகளை உருவாக்குதல் போன்ற செயற்திட்டங்களின் மூலம் தனது கற்கைநெறிகளையும் மற்றும் கல்வித் திட்டங்களையும் மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் சாதனைகள் அர்ப்பணிப்புள்ள விரிவுரையாளர்கள், விடா முயற்சி உள்ள மாணவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சிகள் இல்லாமல் சாத்தியமாகவில்லை. இந்நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்பிற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முடிவாக, 2023ஆம் ஆண்டு மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் சிறப்பிற்கான ஆண்டாக அமைந்துள்ளது என்று கூறின் மிகையாகாது. நாம் முன்னேறிச் செல்லும்போது மனிதவளங்களின் எப்போதும் வளர்ந்து வரும் நிலப்பரப்பில் செழித்து வளரத் தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டு தனிநபர்களையும் மேம்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பில் நாம் உறுதியுடன் இருக்கின்றோம்.

**பேராசிரியர் டபிள்யூ. எஸ். சாகர சந்திரசேகர**
**பணிப்பாளர். மனித வள மேம்பாட்டு நிறுவகம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

# பொருளடக்கம்

**மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் வரலாறு (ம.வ.மே.நி)** 59-63

மனிதவள மேம்பாட்டு நிறுவகம் குறித்த சுருக்கம்

2023 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகம் நடாத்திய கற்கைநெறிகள்.

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முகாமைத்துவம்

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2023 இன் நிர்வாகக் கட்டமைப்பின் அமைப்பு

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் குழுக்கள

**2023 இல் அபிவிருத்தி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாதனைகள** 64-66

அபிவிருத்திகள்

சாதனைகள்

**2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பாய்வு** 67-78

கல்விசார் திட்டங்கள்

- முதுமாணிக் கற்கைநெறி
- இளமாணிக் கற்கைநெறி
- நிர்வாக / உயர் டிப்ளோமா கற்கைநெறி
- சான்றிதழ் கற்கைநெறி

2023 ஆம் ஆண்டு பயிற்சித் திட்டத்தின் விபரங்கள.

கல்விசார், நிர்வாக, கல்வி சார் உதவியாளர், மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர் களின் விபரங்கள் - 2022

நூலகம்

**வருடாந்த நிதிக் கூற்றுக்கள் - 2023** 79-99

நிறுவகத் தகவல்

தயாரிப்பின் அடிப்படை

குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2023 டிசம்பர் மாதம் 31ம் திகதியன்று நிதி நிலைமை பற்றிய கூற்று

2023-12-31 திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் நிதி செயலாற்றுகை கூற்று

2023-12-31 திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று

31.12.2023 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரித்துக்கள் / தேறிய சொத்துக்கள் மாற்றம் பற்றிய கூற்று.

குறிப்பு 04 காசு மற்றும் காசின் சமநிலை

குறிப்பு 05 ஊழியர் கடன்

குறிப்பு 06 முற்பணக்கொடுப்பனவுகள்

குறிப்பு 07 வைப்புக்கள் - பெறத்தக்கவைகள்

குறிப்பு 08 கால வைப்புக்கள் மற்றும் வட்டி அட்டவணை 2023

குறிப்பு 09 கட்புலனாகாத சொத்துக்கள் - மென் பொருள்

குறிப்பு 10

குறிப்பு 11 முன்கொண்டு செல்லப்பட்ட பெறப்பட்ட வருமானம் 2023

குறிப்பு 12 நானாவித பெறுகைகள்

குறிப்பு 13 வைப்புக்கள் (செலுத்த வேண்டியவை) 2023

குறிப்பு 14 நிறுத்தி வைக்கப்பட்ட பணம

குறிப்பு 15 கணக்காய்வு கட்டண ஏற்பாடு 2023

குறிப்பு 16 ஓய்வூதிய ஒதுக்கீடுகள் 2023

குறிப்பு 17 மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்

குறிப்பு 18 கருத்திட்ட கற்கைநெறிகளின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்

குறிப்பு 19 ஏனைய வருமானக் கூற்று 2023

குறிப்பு 20 செலவுக் கூற்று 2023

100-106

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பாகம் ஐஐஐ இன் 17 (ஈ) உட் பிரிவின் கீழ் நிலைபேறான அபிவிருத்தியின் அடிப்படையிலான எதிர்கால எதிர்வுகூறுகை அறிக்கை – 2023

**கணக்காய்வாளர் அறிக்கை** 107-119

2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன், இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள்இ பிரசட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.



# 01

# மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் வரலாறு (ம.வ.மே.நி)

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் வரலாறு நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக நீடிக்கின்றது. இதன் முன்னோடியான ஊழியர் கல்வி நிறுவகம் 1975 ஆம் ஆண்டு 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க ஒழுங்கு முறைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஊழியர் கல்வி நிறுவகம் மனித வள மேம்பாட்டு நிறுவகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. 2017 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2033/10 இலக்க விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின் மூலம் மனித வள மேம்பாட்டு நிறுவகத்திற்குப் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் கல்விசார் தகைமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஓர் நிறுவகம் ஆகும். கடந்த நாற்பதாண்டுகளிற்கு மேலாக மனித வள மேம்பாட்டு நிறுவகம் பல்வேறு மாற்றங்களை எதிர் கொண்டுள்ளது. துனியார் துறையின் வளர்ச்சி, அறிவியல், பொருளாதாரம், மற்றும் தொழிலாளர் உலக மயமாக்கல் போன்றவை இதற்குள் அடங்கும். இம் மாற்றங்களிற்கு ஏற்ப ஒழுங்குபடுத்திக் கொள்ளும் முயற்சியில் இந் நிறுவகம் தொடர்ந்து வளர்ச்சி கண்டுள்ளது. இதன் முதன்மை நோக்கம் நிர்வாக மற்றும் தொழில் முறை சேவைக் குழுக்களிற்குக் கல்வியை வழங்குதல் என்பதாகும்.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் அதன் கல்வி நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. எந்த உயர் கல்வி நிறுவகத்திற்கும் ஏற்புடையது போல உயர்தர கல்வித் தரநிலைகளைப் பேணுதல் மற்றும் சிறந்த கல்வி முறைகளை முன்னெடுத்து செல்லுதல் என்பன மனிதவள அபிவிருத்தி நிறுவகத்தின் முக்கிய பொறுப்புக்களாகும்.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் நிறுவப்பட்டதன் முக்கிய நோக்கம் அனைத்து பணியாளர்களிற்கும் தமது திறமைகள், தலைமைத்துவ பண்புகள் மற்றும் தொழிலாளர் பொறுப்புகள் பற்றிய உயர்தரக் கல்வியை வழங்குவதாகும். இதன் மூலம் அவர்கள் தமது வேலைத்தளங்களில் சிறப்பாக செயற்பட முடியும். 1983 ஆம் ஆண்டு வரை அறிவியல் கற்கை நெறிகள் வழங்கப்பட்டன. 1986 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர் கல்வி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டில் முதல் முறையாக முதுமாணி கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.

## 1.1 மனிதவள மேம்பாட்டு நிறுவகம் குறித்த சுருக்கம்

2023ஆம் ஆண்டு 398 முதுமாணிப் பட்டதாரிகள் மற்றும் 456 இளநிலைப் பட்டதாரிகள் உட்பட 3,300 மாணவர்களிற்கு கல்வி வழங்கப்பட்டது. இந்நிறுவகம் தனது நோக்கத்திற்கேற்ப தனித்துவமான கல்வித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் வேலை செய்பவர்களிற்கான தலைமைத்துவத் திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்கள் தங்கள் தொழில் நுட்பத்திறன்கள் மற்றும் தலைமைத்துவக் குணங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் நான்கு முக்கிய பிரிவுகளின் கீழ் தனது கல்வித் திட்டங்களை வழங்குகின்றது. அவையாவன - பட்டப் பின் படிப்புகள் - 04; பட்டப் படிப்புகள் - 01; நிர்வாக / உயர்தர டிப்ளோமாக்கள் - 03; டிப்ளோமா கற்கைநெறிகள் - 05; மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் - 15. இக் கற்கை நெறிகள் 2019-2023 கல்வித் திட்டத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

### பதியப்பட்ட மொத்த மாணவர்கள் - 2023




மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

2023 ஆம் ஆண்டு முழுவதும் மொத்தமாக 3,530 மாணவர்கள் பல்வேறு கற்கைநெறிகளில் கல்வி கற்றுள்ளனர்.

## 1.2 2023 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகம் நடாத்திய கற்கைநெறிகள்

**01 பட்டப்பின் கற்கைநெறிகள**

- வணிக முகாமைத்துவ முதுமாணிக் கற்கை நெறி.
- மனித வள முகாமைத்துவ முதுமாணிக் கற்கை நெறி.
- சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிக் கற்கை நெறி.

**02 இளமாணிப் பட்டக் கற்கை நெறிகள**

தொழில் முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி

**MP நிர்வாக / உயர் டிப்ளோமா மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள்**

- ஆலோசனை மற்றும் உளவியல் உயர் டிப்ளோமா கற்கைநெறி.
- சேவை முகாமைத்துவ உயர் டிப்ளோமா கற்கைநெறி.
- சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ உயர் டிப்ளோமா கற்கைநெறி.
- சேவை முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி.
- போதைப்பொருள் துஸ்பிரயோக முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி.
- உளவியல் ஆலோசனை டிப்ளோமா கற்கைநெறி.
- மேலதிக மொழியாக தமிழ் மொழி டிப்ளோமா கற்கைநெறி.
- தொழிற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி.

**04 சான்றிதழ் கற்கைநெறிகள**

- ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி.
- பாடசாலை விட்டு வெளியேறியவர்களிற்கான குறுகியகால ஆங்கில மொழிக் கற்கைநெறி.
- ஆங்கில மொழி அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறி.
- தமிழ் மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படைநிலை.
- தமிழ் மொழி சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை
- கணனிப் பயன்பாடு சான்றிதழ் கற்கைநெறி.
- ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படைநிலை.
- ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை.
- ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - உயர்நிலை.
- கொரிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படைநிலை.
- கொரிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை.
- கொரிய மொழி சான்றிதழ் கற்கைநெறி - உயர்நிலை.
- விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ சான்றிதழ் கற்கைநெறி.

மனித வள மேம்பாட்டு நிறுவகமானது உலகளாவிய சவாலான சூழ்நிலைகளையும் எமது தேசிய அபிவிருத்தியில் அறிவார்ந்த வலுவான முதிர்ந்த விவேகமுள்ள அறிவைப் பயன்படுத்தக் கூடியதுமான மனித வளத்தை மேம்படுத்துவதற்கு முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஒரு சிறந்த நிறுவகமாக மாறவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்காக மனித வள மேம்பாட்டு நிறுவகம் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்ற பாரம்பரிய கல்விமரபுகள் மற்றும் உயர் கல்வியின் தரங்களை உறுதிப்படுத்துவதன் மூலம் ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின் நோக்கம் நல்லாட்சியின் தரங்களைப் பூர்த்தி செய்வதும், நிறுவகத்தின் கல்வித் திட்டங்களிற்கு உள்ளூர் மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுவதும் மற்றும் அதன் மூலம் சமூகப் பொறுப்புடன் தேடப்படும் உத்தியோகத்தர் குழாமின் வர்த்தக பெயரைக் கொண்ட பொது நிறுவகமாக மாறுவதுமாகும்.

## 1.3 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முகாமைத்துவம்

மார்ச் 2021 முதல் நடை முறைக்கு வரும் வகையில் 2021 ஆண்டின் பொதுக் கட்டளைச் சட்ட இல.01 இன் பிரகாரம் நிறுவகத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. இதன் பிரகாரம் நிறுவகத்தின் பிரதான நிர்வாகக் கட்டமைப்பானது முகாமைத்துவ சபை, கற்கை ஒருங்கிணைப்பாளர் குழு, கல்விச் சபை மற்றும் குழுக்களினால் இயக்கப்படுகின்றது. இதன் பணிப்பாளர் முழு நேர உத்தியோகத்தராக நிறுவகத்தின் நிர்வாக மற்றும் கல்வித் தலைவராக பணியாற்றுகின்றார். இப் பொதுக் கட்ளையின் படி பணிப்பாளரை நியமிக்கும் அதிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவின் அனுமதியுடன் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு துணைவேந்தரால் பணிப்பாளர் பரிந்துரைக்கப்பட்டு பணிப்பாளர் நியமனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. பணிப்பாளர் முகாமைத்துவ சபையின் தலைவராகவும் மற்றும் கல்விக் குழுக்களின் அதிகாரபூர்வ உறுப்பினராகவும் உள்ளார். அவர் நிறுவகத்தின் கணக்கியல் உத்தியோகத்தராகவும் மற்றும் நிறுவகத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு பொறுப்பானவராகவும் உள்ளார். நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## 1.4 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் 2023 இன் நிர்வாகக் கட்டமைப்பின் அமைப்பு




நிறுவகத்தின் ஒருங்கிணைந்த மற்றும் செயற் திட்டங்களுக்கு ஏற்ப இந்த புதிய கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது

## 1.5 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் குழுக்கள்

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் நிர்வாக அமைப்பின் கட்டமைப்பின்படி கல்விக் குழுவின் அங்கீகாரத்துடன் நான்கு கல்விச் சபைகள் நிறுவப்பட்டுள்ளன. புதிய பொதுக் கட்டளைச் சட்ட திருத்தங்களிற்குப் பின்பு 2021 மே மாதம் முதல் முகாமைத்துவ குழு பிரதான நிர்வாகக் கட்டமைப்பாக மாற்றப்பட்டது. சிபார்சு செய்யப்பட்ட கற்கைத்திட்டத்தின்படி நிறுவப்பட்ட கல்விச் சபைகள் கல்வி ஒருங்கிணைப்புக் குழுவிற்கு உட்பட்டது. மேலும் நிர்வாகக் கட்டமைப்பானது தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் நிறுவப்பட்ட குழுக்களைக் கொண்டுள்ளது.

### 1.5.2 முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் - 2023ஆம் ஆண்டில் 12 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

| பெயர் | நியமன உத்தியோகத்தர் |
|---|---|
| பேராசிரியர் டபிள்யு. எஸ். சந்ரசேகர | தலைவர் |
| பேராசிரியர் உபுள் சொன்னாதர | பதவிவழி உத்தியோகத்தர் |
| கலாநிதி லசந்த மானவடு | பதவிவழி உத்தியோகத்தர் |
| கலாநிதி கபில பண்டார | பதவிவழி உத்தியோகத்தர் |
| பேராசிரியர் பியசிரி விதானகே | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| பேராசிரியர் டி. எம். எ. திசாநாயக்க | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. எச். எம். டபிள்யு. ஹேரத் | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. பேமசந்திர யாபா | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. துமித விக்கிரமசிங்க | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. ஆர். எ. யு. ரணவீர | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| திரு. ஏ. பிரபாசீலன் | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| பேராசிரியர் சம்பிக்க பத்திரன(யூன் 23 வரை) | ப.மா.ஆ.குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| பேராசிரியர் எம். பி. பி. தர்மதாச | பல்கலைக்கழக மூதவையினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| சிரேஸ்ட விரிவுரையாளர் நிஹால் ஹேவகே | கற்கைச் சபையின் பிரதிநிதி |

2021 ஆம் ஆண்டு இல. 01 இன் பொதுக் கட்டளைச் சட்டத்தின்படி தற்போதுள்ள நான்கு கல்விக் குழுக்கள் மற்றும் ஏழு குழுக்களின் எண்ணிக்கையைத் தவிர, கல்வி ஒருங்கிணைப்புக் குழு எனப் பெயரிடப்பட்ட புதியகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்தகைய நான்கு கல்விக் குழுக்களின் பரிந்துரைகள் இக் குழுவின் ஊடாக முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

### 1.5.3 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் கல்விச் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

| கல்விச்சபை | நடாத்தப்பட்ட கூட்டங்கள் |
|---|---|
| முதுமாணிக் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிக்கான கல்விச் சபை | 12 |
| இளமாணிக் கற்கை நெறிகளிற்கான கல்விச் சபை | 12 |
| மொழிக் கற்கை நெறிகளிற்கான கல்விச் சபை | 12 |
| விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களிற்கான கல்விச் சபை | 12 |

### 1.5.4 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் குழுக்களினால் நடாத்தப்பட்ட கூட்டங்கள்.

நிறுவகக் கட்டமைப்பானது முகாமைத்துவச் சபையுடனும் கல்விச் சபையுடனும் நேரடியாகப் பொறுப்பேற்கின்ற ஏழு குழுக்களைக் கொண்டுள்ளது.

| குழு | நடாத்தப்பட்ட கூட்டங்கள் |
|---|---|
| கல்வி ஒருங்கிணைப்புக் குழு | 11 |
| கணக்காய்வுக் குழு (சுயாதீனக் குழு) | 04 |
| நிதிக் குழு | 10 |
| நூலகக் குழு | 02 |
| கொள்முதல் குழு | 12 |
| ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் பயிற்சிக் குழு | 01 |
| உள்ளக தர நிர்ணயக் குழு | 02 |

# 02 2023 இல் அபிவிருத்தி மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாதனைகள்



## 2.1 அபிவிருத்திகள்

நிறுவகத்தில் உள்ள அனைத்து துறைகள் மண்டபங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் பொது இடங்களிலும் அடையாளப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணவர்கள், வெளியாட்கள், ஊழியர்கள் அனைவரும் எளிதில் எத்துறையையும் அடையாளம் காண முடியும் வகையில் நிறுவகத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

## 2.2 சாதனைகள்

### 2.2.1 கல்விசார் சாதனைகள்

- முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் பற்றிய நான்காவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நவம்பர் 24, 2023 நடைபெற்றது.
- நிறுவகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கற்கை நெறிகளின் ஊடக விளம்பரங்களின் முதற்படியாக சமூக ஊடகங்களில் விளம்பர நடவடிக்கைகள் இடம்பெற்றன.
- பார்வையாளர்களிற்கு பயனர்-நட்பாக இருக்கும் வகையில் வலைத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கற்கை நெறிகளின் நடைமுறை அம்சங்களை மேம்படுத்துவதற்காக ஊடாடும் செயற்பாடுகள் கலந்துரையாடல்கள் மற்றும் நேரடிக் கற்றல் போன்றவற்றிற்கு வகுப்பறை நேரத்தைப் பயன்படுத்துவதே இந் நிறுவகத்தின் பிரதான நோக்கமாகும்.

### 2.2.2 நிறுவகத்தினதும் ஊழியர்களினதும் சாதனைகள்

- திரு. எம். எஸ். சி. பெரேரா ஐந்தாவது சர்வதேச ஊழியர்கள் பூப்பந்துப் போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றார்.
- திரு. எம். எஸ். சி. பெரேரா கொறியன் சங்கத் தலைமை அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை பொதுச் சேவைகள் விளையாட்டுக் கழகத்தின் தேசியமட்ட

விளையாட்டுப் போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றார்.

- திரு. எம். எஸ். சி. பெரேரா கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட பூப்பந்துப் போட்டியில் மூன்றாம் இடத்தினை வென்று தேசிய விருதினைப் பெற்றார்.

- திரு. எம். எஸ். சி. பெரேரா துணைவேந்தரின் சவால் 2023 - கொழும்புப் பலகலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட பூப்பந்துப் போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றார். அவர் நாற்பது வயதிற்கு மேற் பட்டவர்கள் பிரிவிலும் மூன்றாம் இடத்தினைப் பெற்றார்.

- திரு. டி. ஜி. சி. என். பண்டார ஐந்தாவது தேசிய ஊழியர்களின் கிரிக்கெற் போட்டியில் கலந்து கொண்டார்.

- திரு. எம். எஸ். சி. பெரேரா களனிப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை பொதுச் சேவைகள் விளையாட்டுக் கழகத்தின் அகில இலங்கை தேசியமட்டக் கிரிக்கெற் போட்டியில் கலந்து கொண்டார்.

- திரு. எம். எஸ். சி. பெரேரா அகில இலங்கை பொதுச் சேவைகள் விளையாட்டுக் கழகத்தின் அகில இலங்கை கிரிக்கெற் போட்டியில் கலந்து கொண்டார்.

### 2.2.3 மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் சமூகப் பொறுப்பு

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகம் மற்றும் அத்தியாவசிய பாடசாலை எழுது பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி அ/விலாச்சிய சாலியமல வித்தியாலயம் மற்றும் அ/சியம்பலகஸ்வேவ அசோகா கல்லூரி மாணவர்களிற்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.





அ/சியம்பலகஸ்வேவ அசோகா கல்லூரி மாணவர்களிற்கு அத்தியாவசிய பாடசாலை எழுது பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி



துணைவேந்தரின் சவால் 2023 - கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட பூப்பந்துப் போட்டி




திரு. எம். எஸ். சி. பெரேரா ஐந்தாவது சர்வதேச ஊழியர்கள் பூப்பந்துப் போட்டியில் இரண்டாவது இடத்தை வென்றார் - 2023



அ/விலாச்சிய சாலியமல வித்தியாலயம்



# 03
# 2023 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பாய்வு

## 3.1 கல்விசார் திட்டங்கள்

2023 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகம் ஐந்து வகையான இருபத்தேழு கற்கை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது.

- முதுமாணிக் கற்கைநெறி
- இளமாணிக் கற்கைநெறி
- நிர்வாக / உயர் டிப்ளோமா கற்கைநெறி
- சான்றிதழ் கற்கைநெறி

### 3.1.1. முதுமாணி கற்கைநெறி

மனித வள மேம்பாட்டு நிறுவகம் ஆறு முதுமாணிப் பட்டங்களை வழங்குகின்றது. மாணவர்கள் முதன்மையாக அவர்களது தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தவும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அறிவு மற்றும் தேர்ச்சி பெறவும், அவர்களது தொழில் பாதைகளில் முன்னேற்றம் காணவும், வேலை வாய்ப்புக்கள் மற்றும் சம்பாதிக்கும் திறனை விரிவுபடுத்தவும், மனித வள மேம்பாட்டு நிறுவகத்துடன் இணைகின்றார்கள்.

தொடர்ச்சியான சுய-கற்றல்முறை, கருத்தரங்குகள், கள ஆய்வுச் சுற்றுலாத்துறை, வலையமைக்கப்பட்ட கருத்தரங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் தனித்துவமான கற்பித்தல் பாணியானது மாணவர்களின் தொடர்ச்சியான வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவகம் தனது கற்கை நெறிகளையும் பாடத்திட்டங்களையும் மேம்படுத்துவதற்கும் மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் கற்பவர்களிடமிருந்து வரும் கருத்துக்களில் எப்போதும் கவனம் செலுத்துகின்றது.

போட்டிச் சந்தைகளின் தேவைகளிற்கேற்ப வடிவமைக்கப்பட்ட இப் பட்டப்பின் படிப்புக்களின் மூலமாக உருவாக்கப்பட்ட பட்டதாரிகள் நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர்.

தற்போது மனித வள மேம்பாட்டு நிறுவகம் மேலாண்மையுடன் தொடர்புடைய ஐந்து பட்டப்பின் கற்கை நெறிகளை நடாத்துகின்றது. அவையாவன;

- ☐ வணிக முகாமைத்துவ முதுமாணிப் பட்டம்
- ☐ மனித வள முகாமைத்துவ முதுமாணிப் பட்டம்
- ☐ சேவை, அறிவியல் முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிப் பட்டம்
- ☐ புவிசார் தகவல்கள் விஞ்ஞான முதுமாணிப் பட்டம்
- ☐ பேரிடர்பகுப்பாய்வு மற்றும் தணிக்கை முகாமைத்துவ முதுமாணிப் பட்டம்

வணிக நிர்வாக முதுமாணிக் கற்கை நெறி, வணிக முகாமைத்துவத்தின் முக்கிய தேவைகள் மீதும் மனித வள முகாமைத்துவ முதுமாணிக் கற்கை நெறி மனித வள முகாமைத்துவத் துறையின் தற்போதைய தேவைகள் மீதும் கவனம் செலுத்துகின்றது. சேவை முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டமும் சேவை முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டமும் பல்கலைக்கழக அமைப்பின் தனித்துவமான பட்டப்பின் கற்கை நெறிகளாகும். ஏனெனில் இவை மாத்திரமே சேவை நிர்வாகத்தில் உள்ள ஒரே முதுமாணிக் கற்கை நெறிகளாகும்.

சேவைத் துறையில் ஏற்படும் எந்த வொரு பிரச்சினையையும் நம்பிக்கையுடன் சமாளிக்கத் தேவையான கருத்தியல் மற்றும் பகுப்பாய்வுக் கருவிகளை உருவாக்குவதில் இந் நிறுவகம் கவனம் செலுத்துகின்றது. பேரிடர் பகுப்பாய்வு முகாமைத்துவ கற்கை நெறிகள் பல்வேறு பேரிடர்களை பகுப்பாய்வு செய்யவும் திட்டமிடவும், திறம் பட பதிலளிக்கவும், பேரிடர் மதிப்பீடு, அவசரகால பதிலளிப்பு, திட்டமிடல் மற்றும் நிலையான பேரிடர் குறைப்பு உத்திகள் ஆகியவற்றில் மாணவர்களுக்குத் தேவையான நிபுணத்துவத்தை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் இக் கற்கை நெறிக்கு புதிய ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை என்பதுடன் முன்-கற்கைநெறியுடன் தொடர்பான மாணவர்கள் இந்த ஆண்டும் விண்ணப்பித்து உள்ளனர். 2017 ஆம் ஆண்டு முதல் புவிசார் தகவல் கற்கைக்காக மாணவர்கள் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது முதுமாணிக் கற்கைத் திட்டங்களின் விகிதம் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

அனைத்து முதுமாணிக் கற்கை திட்டங்களின் வெளியீடு விகிதம் 2023 ஆண்டில் பத்து வீதமாக இருந்தது**




| | வருடாந்த உள்வாங்கல் | | | | | பட்டம் பெற்றவர்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| வணிக முகாமைத்துவ முதுமாணி கற்கைநெறி | 96 | 70 | 59 | 49 | 95 | 64 | 86 | 73 | 176 | 179 |
| மனித வள முகாமைத்துவ முதுமாணி கற்கைநெறி | 65 | 53 | 74 | 86 | 159 | 44 | 59 | 32 | 140 | 137 |
| சேவை முகாமைத்துவ முதுமாணி கற்கைநெறி | 0 | 40 | 83 | 39 | 122 | 73 | 0 | 0 | 117 | 117 |
| புவிசார் தகவல்களில் விஞ்ஞான முதுமாணி கற்கைநெறி | 0 | 0 | 0 | 0 | 0 | 55 | 5 | 0 | 1 | 1 |
| பேரிடர் பகுப்பாய்வு மேலாண்மை மற்றும் தணிப்பில் விஞ்ஞான முதுமாணி கற்கைநெறி | 0 | 0 | 22 | 0 | 22 | 3 | 0 | 20 | 0 | 17 |

*மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி*

மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, வரை படங்களில் வழங்கப்பட்டுள்ள தரவுகள், என்பன அந்தந்த ஆண்டில் தகுதிளைப் பெற்ற அல்லது பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது. இத் தரவுகள் நடப்பாண்டின் வருடாந்த சேர்க்கைக்குப் பொருந்தாது.

### 3.1.2 இளமாணிக் கற்கைத் திட்டம்

#### 3.1.2.1 தொழில் முகாமைத்துவ இளமாணிக் கற்கை நெறி (தொ.மு.இ)

தேவையான அளவிலும், தரத்திலும் மனித திறன்களை வளர்ப்பதும், கூட்டுத் தேர்வு மற்றும் கூட்டு முயற்சிகளுக்கு தொழிலாளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் கல்வியை வழங்குவதும் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இதன் பிரகாரம் தொழிலாளர் கற்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும் தற்கால நடைமுறைத் தேவைகளைக் கருத்திற் கொண்டு மாணவர்களிற்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் தொழில் முகாமைத்துவ பட்டப்படிப்பு திட்டம் 2020 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

2023ஆம் ஆண்டில் தொழில் முகாமைத்துவ கற்கை நெறிக்கு 168 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். இக் கற்கை நெறி இவ்வாண்டு சிங்கள மொழி மூலம் நடாத்தப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவகத்தால் நடாத்தப்படும் தொழிலாளர் முகாமைத்துவ இளமாணி, பொது மற்றும் சிறப்பு பட்டக்கற்கை நெறிகள் இரண்டும் பரந்த முகாமைத்துவத் துறையை உள்ளடக்கியதுடன் இக்கற்கை நெறிகள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் முதன் முறையாக நடாத்தப்படுகின்றன. தொழில் முகாமைத்துவப் பட்டம் (பொது) மூன்றுவருட வேலைத் திட்டமாகும் இது எஸ். எல். கியூ. எவ். ஐந்தாவது வகையின் கீழ் வருகின்றது. தொழில் முகாமைத்துவ பட்டம் (சிறப்பு) நான்கு வருட வேலைத் திட்டமாகும். இது எஸ். எல். கியூ. எவ். ஆறாவது வகையின் கீழ் வருகின்றது. கல்வி நோக்குநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுடன் இப்புதிய கற்கை நெறியானது ஊழியர்கள் தமது உயர் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் அனுபவத்தையும் அறிவையும் பெறுவதில் முக்கிய இடம் பெறுவதுடன் நாட்டின் முதலிடத்தில் உள்ள (2020 முதல் 2023 ஆம் ஆண்டுகள் வரை) கௌரவமிக்க பல்கலைக்கழகமாகிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஓர் உள்ளகக் கற்கைநெறியாகவும் அமைகின்றது.




| | வருடாந்த உள்வாங்கல் | | | | | தேர்ச்சி பெற்ற / பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| தொழில் முகாமைத்துவ இளமாணி | 211 | 0 | 193 | 344 | 168 | 119 | 132 | 0 | 0 | 178 |
| தொழில் கல்வி இளமாணி | 89 | 0 | 45 | 56 | 0 | 35 | 62 | 61 | 42 | 31 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

### 3.1.3. நிர்வாக / உயர் டிப்ளோமா திட்டம

இத் திட்டத்தின் முக்கிய நோக்கம் முகாமையாளர்கள் தமது பணியுடன் தொடர்புடைய துறைகளில் தமது அறிவை மேம்படுத்துவதற்கும் புதுப்பிப்பதற்குமான வாய்ப்புக்களை வழங்குவதாகும். தனிப்பட்ட வளர்ச்சியை மையமாகக் கொண்ட அனைத்து நிர்வாக டிப்ளோமா கற்கை நெறிகளும் அவற்றைப் பயில்வோருக்கு அவர்களின் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட சவாலான நடத்தை முறைகளை அனுபவமாகக் கருதி திறம்பட பணியாற்றுவதற்கு முக்கியமான அடித்தளமாக அமைகின்றது என்ற உறுதியான நம்பிக்கை வேரூன்றியுள்ளது.

இக்கற்கை நெறிகளின் கற்கைக்காலம் ஒரு வருடமாகும். மனிதவள மேம்பாட்டு நிறுவகம் தனது தனித்துவமான கற்பித்தல் பணிகள், தொடர்ச்சியான மதிப்பீடுகள் பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கள ஆய்வுகள் மூலமாக மாணவர்களிற்கு அவர்களது தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது.




| | வருடாந்த உள்வாங்கல் | | | | | தேர்ச்சி பெற்ற / பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| சுற்றுலா நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் மேலாண்மையில் நிர்வாக டிப்ளோமா கற்கை நெறி | 30 | 22 | 21 | 28 | 31 | 0 | 19 | 16 | 68 | 16 |
| உளவியல் ஆலோசனையில் உயர்டிப்ளோமா கற்கை நெறி | 0 | 80 | 63 | 138 | 71 | 25 | 25 | 0 | 42 | 79 |
| சேவை முகாமைத்துவத்தில் நிர்வாக டிப்ளோமா கற்கை நெறி | 0 | 0 | 0 | 0 | 37 | 19 | 0 | 0 | 0 | 0 |

**மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி**

### 3.1.4. டிப்ளோமா திட்டம

மனித வள மேம்பாட்டு நிறுவகம் நான்கு டிப்ளோமா திட்டங்களை வழங்குகின்றது. முகாமைத்துவம், மனித நேயம் மற்றும் மொழிக் கற்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய இக்கற்கை நெறிகள் அடிப்படை நிலை உத்தியோகத்தர்களது அறிவு விருத்தி, பகுப்பாய்வுச் சிந்தனை, தலைமைத்துவத் திறன், நெறி முறை தரநிலைகள் மற்றும் அந்தந்த துறைகளின் பொறுப்புக்களுக்கு உதவும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ் டிப்ளோமா கற்கைநெறிகள் மாணவர்கள் தமது கற்கைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அவை வெவ்வேறு கல்வி நிலைகளுக்கு இடையிலான இடை வெளிகளைக் குறைப்பதற்கும் அல்லது கூடுதல் தொழிற் கல்வி பயிற்சி மற்றும் தகுதிகளை வழங்குவதற்கும் உதவுகின்றன. மேலும் டிப்ளோமாவாக இக்கற்கை நெறி முக்கியமான சிறப்பு திறன்கள், அறிவு மற்றும் அனுபவத்தை வழங்குகின்றது.

ஒருவர் தொழில் முறை ஆலோசகராக ஆவதற்கான திறன்களை மேம்படுத்துவதற்கான ஒரு கல்வித் திட்டத்தைத் தேடுபவராக இருந்தால், உளவியல் ஆலோசனை டிப்ளோமோ கற்கைநெறி அவரது / அவளது கல்வி இலக்கை அடைய ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். இக்கற்கை நெறிகள் ஒரு எதிர்கால தொழில் முறை ஆலோசகரின் பங்கிற்கான வலுவான அடித்தளத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நடைமுறை அம்சங்கள் ஒரு தனிநபரின் அடிப்படை ஆலோசனைத் திறன்களை வலுப்படுத்துவதுடன் சேவை பயனருடன் வலுவான உறவை உருவாக்கவும், அவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான முன்னேற்றத்தை அடைய வழிகாட்டவும் உதவுகின்றன. உளவியல் ஆலோசனை டிப்ளோமோ கற்கை நெறியினை கற்பதன் மூலம், மாணவர்கள் அடிப்படை ஆலோசனை முறைகள் மற்றும் அணுகு முறைகளையும் கற்றுக் கொள்வார்கள்.

புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டதன் பின் முகாமைத்துவ டிப்ளோமா கற்கைக்கான மாணவர்களின் அனுமதி 2021 இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது




| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருடாந்த உள்வாங்கல் | | | | | தேர்ச்சி பெற்ற / பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
| சேவை முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி | 0 | 0 | 71 | 29 | 0 | 11 | 0 | 0 | 42 | 24 |
| போதைப்பொருள் துஸ்பிரயோக முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி | 46 | 40 | 32 | 21 | 28 | 0 | 28 | 0 | 0 | 13 |
| உளவியல் ஆலோசனை டிப்ளோமா கற்கைநெறி | 0 | 78 | 94 | 139 | 267 | 29 | 15 | 0 | 68 | 77 |
| மேலதிக மொழியாக தமிழ்மொழி டிப்ளோமா கற்கைநெறி | 92 | 0 | 0 | 85 | 154 | 73 | 0 | 68 | 68 | 134 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

### 3.1.5 சான்றிதழ் திட்டம்.

மனித வள மேம்பாட்டு நிறுவகம் மாணவர்களின் தொழின்முறை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பல்வேறு சிறப்புத் துறைகளில் பத்து சான்றிதழ் கற்கைநெறிகளை வழங்குகின்றது. இந்த திட்டங்களின் விவரங்கள் கீழே உள்ள வரைபடங்கள் மற்றும் அட்டவணைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.
இத் திட்டங்களின் கற்கை நெறிக்காலம் 03-08 மாதங்கள் வரை ஆகும்.

2023ஆம் கல்வியாண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகம் ஆறு சான்றிதழ் கற்கை நெறிகளிற்கு மட்டுமே மாணவர்களை இணைத்துக் கொண்டது. இக் கற்கை நெறிகளுடன் இரண்டு புதிய சான்றிதழ் கற்கை நெறிகள் ஜப்பானிய மற்றும் கொரிய மொழிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் கற்கை நெறிகளின் விகிதாசாரம் 83% ஆகும்.

## சான்றிதழ் கற்கை நெறிகளில் மாணவர்களின் செயற்றிறன் 2019 - 2023




| | வருடாந்த உள்வாங்கல் | | | | | தேர்ச்சி பெற்ற / பட்டம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
| ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை நெறி | 1938 | 512 | 0 | 682 | 777 | 0 | 1422 | 122 | 89 | 697 |
| அடிப்படை ஆங்கில மொழி கல்வி சான்றிதழ் கற்கை நெறி | 429 | 64 | 0 | 85 | 195 | 0 | 300 | 53 | 15 | 162 |
| ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை நெறி | 52 | 0 | 0 | 0 | 109 | 0 | 44 | 0 | 0 | 0 |
| பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கை நெறி | 383 | 0 | 0 | 0 | 0 | 391 | 239 | 0 | 0 | 0 |
| கணனி பிரயோக சான்றிதழ் கற்கை நெறி | 423 | 0 | 327 | 313 | 339 | 390 | 444 | 178 | 196 | 290 |
| பாடசாலையில் இருந்து விலகியோருக்கான குறுங்கால ஆங்கில சான்றிதழ் கற்கை நெறி | 507 | 213 | 113 | 217 | 109 | 347 | 148 | 76 | 78 | 96 |
| மேலதிக மொழியாக தமிழ் மொழி (அடிப்படை) சான்றிதழ் கற்கை நெறி | 427 | 284 | 170 | 135 | 210 | 196 | 261 | 167 | 89 | 179 |
| மேலதிக மொழியாக தமிழ் மொழி (இடைநிலை) சான்றிதழ் கற்கை நெறி | 110 | 0 | 122 | 96 | 123 | 115 | 96 | 96 | 80 | 71 |
| அடிப்படை ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 22 | 188 | 156 | 0 | 0 | 15 | 13 | 63 |
| இடைநிலை ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 0 | 36 | 33 | 0 | 0 | 0 | 10 | 31 |
| முதுநிலை ஜப்பானிய மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 0 | 0 | 38 | 0 | 0 | 0 | 0 | 13 |
| அடிப்படை கொரியன் மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 15 | 113 | 135 | 0 | 0 | 13 | 18 | 93 |
| இடைநிலை கொரியன் மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 0 | 41 | 45 | 0 | 0 | 0 | 9 | 34 |
| முதுநிலை கொரியன் மொழி சான்றிதழ் கற்கைநெறி | 0 | 0 | 0 | 0 | 27 | 0 | 0 | 0 | 0 | 18 |
| விளையாட்டு விஞ்ஞான முகாமைத்துவ சான்றிதழ் கற்கை நெறி | 0 | 0 | 0 | 0 | 39 | 0 | 0 | 0 | 0 | 0 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

## 3.2 2023 ஆம் ஆண்டு பயிற்சித் திட்டத்தின் விபரங்கள

மனித வள மேம்பாட்டு நிறுவகத்தில் பட்டப் பின் கற்கை நெறிகள், இளமாணிக் கற்கை நெறிகள் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை பயிலும் மாணவர்கள், அவர்களின் கற்கை நெறிகளின் ஒருங்கிணைந்த பகுதியான பயிற்சிப் பட்றைகளீல் கட்டாயமாக பங்கு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இந் நிகழ்ச்சித் திட்டங்கள் மாணவர்களின் தொழில் முறை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளன. விரிவுரைகளைப் போலன்றி, தொழில்சார் உலகத்திற்குத் தொடர்புடைய தலைப்புக்கள், உரையாடல்கள், விவாதங்கள் மற்றும் அவர்களது புதிய யோசனைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இப் பயிற்சிப் பட்டறை ஊக்குவிக்கின்றது. இதில் பங்கு பற்றுவோர் தத்தமது கண்ணோட்டத்தின் அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. மாணவர்களின் புதிய திறன்களை வளர்த்துக் கொள்ளவும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் பயிற்சிப் பட்டறைகள் உதவுகின்றன. இம் மாணவர்கள் தமது செயலாற்றுகைகள் விளக்கக்காட்சிகள், குழுப் பணித்திறன்கள் மூலம் தமது திறன்களை மேம்படுத்தவும் முடியுமாக உள்ளது. இக் கற்கை நெறிகள் மாணவர்களிற்கு அவர்களது மென் திறன்களை பல்வேறு சூழல்களில் வளர்த்துக் கொள்வதற்கும், உணர்ச்சி வசப்படும் உணர்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும், ஆக்க பூர்வமானதும் மற்றும் தற்துணிவான முடிவுகளை எடுப்பதற்கும், மக்களுடன் கலந்துரையாடியும் ஒன்றிணைந்து செயற்பட்டும் அவர்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்தவும், தங்களிற்கும் மற்றவர்களிற்கும் இடையே உள்ள முரண்பாடுகள் பதற்றங்களை குறைப்பதற்கும் வசதிகளை வழங்குகின்றது.

### 3.2.1 நிறுவக உத்தியோகத்தர்களிற்காக நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள்.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் சிட்ரஸ் ஹோட்டல் வஸ்கடுவவில், நிறுவக உத்தியோகத்தர்களின் மென்திறன்களை வளர்க்கும் நோக்கில் ஒரு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. நிறுவகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் மேம்பாடு தொடர்பான திறன்களை மேம்படுத்தும் நோக்கில் பயனுள்ள மற்றும் திறமையான சேவையை வழங்குவதும் இந்நிறுவகத்தின் நோக்கமாகும்.

சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. ஹிரன் ஜயவீர அவர்களால் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் “IHRA இல் மாணவர் தகவல் அமைப்பு அறிமுகம்” என்ற தலைப்பில் மாணவர் தகவல் அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான பயிற்சிப்பட்டறை 14 பெப்ரவரி 2023 அன்று நிறுவகத்தின் நிகழ்ச்சிப் பங்காளர்களிற்கு நடாத்தப்பட்டது. 9 மே 2023 அன்று ரமாடியா ரன்மால் விடுமுறை விடுதியில் வருடாந்த திட்டம் தயாரித்தல் பற்றிய “விழிப்புணர்வு நிகழ்ச்சி” என்ற தலைப்பில் ஆண்டுத் திட்டத்தைத் தயாரிப்பது குறித்து நிறுவகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

### 3.2.2 மாணவர்களின் பொருட்டு நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள

2023 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவகத்தில், அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் மாணவர்களின் அறிவு மற்றும் திறன் மனப்பான்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன், முதுமாணி மற்றும் இளமாணி கற்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களிற்கு நிறுவக வள உதவியாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தில் பொது விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் சர்வதேச வேலைகள் உட்பட பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| வகை | பயிற்சிப் பட்டறை | பங்குபற்றியோரின் எண்ணிக்கை | இலக்கு குழு |
|---|---|---|---|
| பயிற்சிப் பட்டறை | முகாமைத்துவ கொள்கைகளும் மற்றும் நடை முறைகளும் | 57 | வணிக முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் - 13/2023 |
| | முகாமைத்துவ கொள்கைகளும் மற்றும் நடைமுறைகளும | 39 | வணிக முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் - 11/2023 |
| | முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வழங்குதல் | 75 | மனித வள முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் -- 12/2022 |
| | முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் பயன்பாடு | 144 | தொழில் முகாமைத்துவ இளமாணி மாணவர்கள் 2023/2024 |
| | கருத்திட்ட அறிக்கை சமா்ப்பித்தல் | 35 | வணிக முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் - 10/2022 |
| | கருத்திட்ட அறிக்கை சமா்ப்பித்தல் | 30 | வணிக முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் - 10/2022 |
| | செயற்திறன் குறித்த பயிற்சிப் பட்டறை | 66 | மனித வள முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் - 12/2022 |
| | தரவுப் பகுப்பாய்வு குறித்த பயிற்சிப் பட்டறை (SPSS) | 33 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2022 |
| | தரவுப் பகுப்பாய்வு குறித்த பயிற்சிப் பட்டறை (SPSS) | 24 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2021 |
| | தரவுப் பகுப்பாய்வு குறித்த பயிற்சிப் பட்டறை (SPSS) | 31 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2021 |
| | மேலதிக சமா்ப்பிப்பு தொடா்பான பயிற்சிப் பட்டறை- II | 22 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2021 |
| | மேலதிக சமா்ப்பிப்பு தொடா்பான பயிற்சிப் பட்டறை - II | 34 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2021 |
| | தரவுப் பகுப்பாய்வு குறித்த பயிற்சிப் பட்டறை (SPSS) | 09 | சுற்றுலா, நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ நிர்வாக டிப்ளோமா மாணவர்கள் இல. 04 |
| | உளவியல் ஆலோசனை குறித்த வெளிக்கள வருகை | 52 | உளவியல் ஆலோசனை உயா் டிப்ளோமா இல. 06 |
| | நுண்நிதி குறித்த பயிற்சித்திட்டம் | 54 | தொழில் முகாமைத்துவ டிப்ளோமா திட்டம் இல. 06<br>தொழில் முகாமைத்துவ டிப்ளோமா திட்டம் இல. 07 |
| | தரவுப் பகுப்பாய்வு குறித்த பயிற்சிப் பட்டறை (SPSS) | 25 | தொழில் முகாமைத்துவ உயா் டிப்ளோமா திட்ட மாணவர்கள் இல. 06 |
| | உளவியல் ஆலோசனை குறித்த வெளிக்கள வருகை | 52 | உளவியல் ஆலோசனை உயர் டிப்ளோமா மாணவர்கள் 2023 இரண்டாவது குழு |
| | உளவியல் ஆலோசனை குறித்த வெளிக்கள வருகை | 157 | உளவியல் ஆலோசனை உயர்டிப்ளோமா மாணவர்கள் இல. 05 |
| | உளவியல் ஆலோசனை் குறித்த வெளிகள வருகை | 106 | உளவியல் ஆலோசனை உயர் டிப்ளோமா மாணவர்கள் இல. 05 |
| | உளவியல் ஆலோசனை குறித்த வெளிக் கள வருகை | 78 | உளவியல் ஆலோசனை உயர் டிப்ளோமா மாணவர்கள் இல. 05 |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்புற பயிற்சித் திட்டம் | 22 | சேவை முகாமைத்துவ முதுலைப்பட்டமாணவர்கள் -2022 குழு |
| | வெளிப் புற பயிற்சித் திட்டம் | 57 | சேவை முகாமைத்துவ முதுமாணி மாணவர்கள் 2021 |
| **பயிற்சித் திட்டங்கள் கள விளக்கம்** | வெளிப் புற பயிற்சித் திட்டம் | 114 | தொழில் முகாமைத்துவ இளமாணி மாணவர்கள் 2021/ 2022 |
| | வெளிப் புற பயிற்சித் திட்டம் | 07 | சுற்றுலா, நிகழ்வுகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ நிர்வாக டிப்ளோமா மாணவர்கள் இல. 04 |
| | வெளிப் புற பயிற்சித் திட்டம் | 26 | சேவை முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் இல 07 |
| | சம்பவம் தொடர்பான பாத்திரம் ஏற்பு அமர்வு | 32 | சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி மாணவர்கள் 2022 |
| | சம்பவம் தொடர்பான பாத்திரம் ஏற்பு அமர்வு | 54 | சேவை முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் இல. 06 |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

## 3.3. கல்விசார், நிர்வாக, கல்வி சார் உதவியாளர், மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர் களின் விபரங்கள் - 2022

| பதவி | சேவை | தரம் மற்றும் வகுப்பு | சம்பளக் குறியீடு | சேவை வகை | அங்கீகரிக்கப் பட்ட பணிநிலை | | தற்போதுள்ள பணிநிலை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தரம் | ஒப்பந்தம் | நிரந்தரம் | ஒப்பந்தம் |
| **சிரேஸ்ட மட்டம்** | | | | | | | | |
| பணிப்பாளர் | கல்விசார் | | U-AC-5 | 1 | 01 | - | 01 | - |
| பேராசிரியர் | கல்விசார் | | U-AC-5 | 1 | | | | |
| இணைப் பேராசிரியர் | கல்விசார் | | U-AC-4 | 1 | | | | |
| சிரேஸ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (தகுதிகாண்) | கல்விசார் | | U-AC-3 | 1 | 11 | | 08 | |
| சிரேஸ்ட உதவி நூலகர் | கல்விசார் | II/I | U-AC-3 | | 01 | | 01 | |
| பிரதிப் பதிவாளர் | UA & FS | II/I | U-EX-2a | | 01 | | 01 | |
| சிரேஸ்ட உதவி நிதியாளர் | UA & FS | II/I | U-EX-2 | | 01 | | 01 | |
| சிரேஸ்ட உதவி பதிவாளர் | UA & FS | II/I | U-EX-2 | | 01 | | 01 | |
| **மூன்றாம் நிலை** | | | | | | | | |
| உதவிப் பதிவாளர் | UA & FS | II/I | U-EX-1 | 2 | 01 | | 01 | |
| உதவி நிதியாளர் | UA & FS | II/I | U-EX-1 | 2 | 01 | | 01 | |
| அறிவியல் உதவியாளர் | AS | II/I | U-AS 2 | 2 | 01 | | 01 | |
| தகவல் தொழில் நுட்ப பயிற்றுவிப்பாளர் | AS | II/I | U-AS 2 | 2 | 01 | | 01 | |
| **இரண்டாம் நிலை** | | | | | | | | |
| தொழில் நுட்ப உத்தியோகத்தர் (ICT) | UTS | II/I | U-MT 1 | 3 | 06 | | - | |
| முகாமைத்துவ உதவியாளர் | UWAS | III/II/I | U-MN 1 | 3 | 25 | | 19 | |
| முகாமைத்துவ உதவியாளர் கணக்குப் பதிவாளர் | UWAS | III/II/I | U-MN 1 | 3 | 01 | | 01 | |
| முகாமைத்துவ உதவியாளர் (சிராப்பர்) | UWAS | III/II/I | U-MN 1 | 3 | 01 | | 01 | |
| முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியக் காப்பாளர்) | UWAS | III/II/I | U-MN 1 | 3 | 01 | | 01 | |
| நூலக தகவல் உதவியாளர் | UWAS | III/II/I | U-MN 1 | 3 | 03 | | 02 | |
| **முதன்மை நிலை** | | | | | | | | |
| அலுவலக இயந்திர இயக்குநர் | துறைசார்ந்த | III/II/I/Spl | U-PL-1 | 4 | 01 | | 01 | |
| சாரதி | துறைசார்ந்த | III/II/I/Spl | U-PL-3 | 4 | 03 | | 03 | |
| துவிச்சக்கர வண்டி ஓட்டுநர் | துறைசார்ந்த | III/II/I/Spl | U-PL-1 | 4 | 01 | | 01 | |
| அலுவலக உதவியாளர் | UWAS | III/II/I/Spl | U-PL-1 | 4 | 07 | | 05 | |
| நூலக உதவியாளர் | துறைசார்ந்த | III/II/I/Spl | U-PL-2 | 4 | 02 | | 01 | |
| தற்காலிக அறிவியல் உதவியாளர் | துறைசார்ந்த | | நிலையானது | | 01 | | - | |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | ஒப்பந்தம் | | நிலையானது | | 25 | | 25 | |
| அலுவலக உதவியாளர் | ஒப்பந்தம் | | நிலையானது | | 03 | | - | |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

## 3.4 ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விவரங்கள

| ஆய்வாளரின் பெயர் | தலைப்பு | வெளியிடப்பட்டதேதி | இடம் / வெளியீடு |
|---|---|---|---|
| திரு.சி.எல்.எதிரிசிங்க | மீள உறைந்த கண்ணாடி :கண்ணாடி கூரையில் பெண்களின் தொழில்முறை வளர்ச்சிக்கான தடைகள். | 2023 | சமூகவிஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் பற்றிய சர்வதேச இதழ் |
| திருமதி கே. பி.எஸ். சந்த மாலி | இரண்டாம் மொழி வகுப்பறையில் மூன்றாம் நிலை இரண்டாம் மொழி கற்பவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் | 2023 | பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சர்வதேச இதழ் |
| திருமதி கே. பி.எஸ். சந்த மாலி | சிறந்த வீட்டு எண்ணக்கருவின் பிரதிநிதித்துவம் - Robert Frost @ Home Burial | 2023 | பல்துறை கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சர்வதேச இதழ் |
| திருமதி கே. பி.எஸ். சந்த மாலி | ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக பெறுவதற்கு உந்துதல் ஒரு காரணியாகும் | 2023 | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சர்வதேச இதழ் |
| திருமதி.ஆர்.எம்.எஸ்.என். ரத்நாயக்க | நூலகப் பயனாளர்களின் சிறப்புத் தேவைகளை காணுதல் - தற்போதைய ஆராய்ச்சி ஆய்வுகளின் பகுப்பாய்வு | 2023 | தகவல் தொழில் நுட்ப மற்றும் விஞ்ஞான ஆசிய இதழ் |

மூலம் - சேகரிக்கப்பட்ட தரவுகள் 2023, ம.வ.மே.நி

### 3.5. நூலகம்

#### 3.5.1. அறிமுகம்

மனித வள மேம்பாட்டு நிறுவகம் (IHRA) 1975 இல் நூலக சேவைகளை வழங்கத் தொடங்கியது. இது தற்போது கொழும்பு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனித வள மேம்பாட்டு நிறுவகத்தில் (IHRA) அமைந்துள்ளது. நூலகம் 70.4 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. அளவில் மிகச் சிறியதாக இருந்தாலும், இது அண்ணளவாக 6770 புத்தகங்களைக் கொண்டுள்ளதுடன் இது அதன் பயனாளிகளிற்கு ஏனைய சேவைகளையும் வழங்குகின்றது.

மனித வள மேம்பாட்டு நிறுவக நூலகம் தொழில் முகாமைத்துவ இளமாணிக்கற்கை நெறி, மனித வள முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நெறி, வணிக முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நெறி, சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி (சிங்களம்/ ஆங்கிலம்) மற்றும் உளவியல் ஆலோசனையில் டிப்ளோமா/ உயர் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகள் உட்பட்ட பல்வேறு கற்கை நெறிகளிற்கு முக்கிய வளமாக உள்ளது. மாணவர்களின் கல்விசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சேவைகளை இது வழங்குகின்றது. இது வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை திறந்திருக்கும்.

#### 3.5.2. நூலக உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| திட்டங்கள் | தொழில் முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி மாணவர்கள் | 594 |
| | மனித வள முகாமைத்துவ பட்டப்பின் கற்கைநெறி மாணவர்கள் | 73 |
| | வணிக முகாமைத்துவ பட்டப்பின் கற்கைநெறி மாணவர்கள் | 46 |
| | சேவை முகாமைத்துவ முதுமாணி கற்கைநெறி மாணவர்கள் | 316 |
| | உளவியல் ஆலோசனை உயர் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்கள் | 344 |
| நிரந்தர உத்தியோகத்தர்கள | கல்விசார் ஊழியர்கள் | 08 |
| | கல்விசாரா ஊழியர்கள் | 36 |
| | மொத்தம் | **1417** |

## 3.5.3. நூலகத்தினால் வழங்கப்படும் சேவைகள்




### 3.5.4 நூலக சேகரிப்புகள்

#### 3.5.4.1 புத்தகங்கள்

| | |
|---|---|
| சேகரிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை (2023 ஆம் ஆண்டிற்கான) | - 6769 |
| 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை | - 07 |
| ஏற்பட்ட செலவு | - 10640.00 |
| 2023 இல் நன்கொடைகளின் எண்ணிக்கை | - 41 |
| 2023 இல் மொத்த புத்தகங்களின் எண்ணிக்கை | - 6817 |

#### 3.5.4.2 நூலகக் குழுக் கூட்டங்கள்

82 வது கூட்டம் - பெப்ரவரி 06, 2023
82 வது கூட்டம் - நவம்பர் 23, 2023

#### 3.5.4.3 நூலகங்களின் பயன்பாடு

நடப்பு வருடத்தில் உறுப்பினர்களின் மாதாந்த வருகை மாதத்திற்கு எறக்குறைய 77 ஆக இருந்துள்ளது (முன்னைய ஆண்டில் மாதத்திற்கு 53), புத்தகங்களின் மாதாந்த புழக்கம் சுமார் 39 (முன்னைய ஆண்டில் மாதத்திற்கு 30). 2022 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், உறுப்பினர்களின் வருகை 45 ஆல் அதிகரித்துள்ளது. 2023 இல் மாதாந்த புத்தகங்களின் புழக்கம் 30 ஆல் அதிகரித்துள்ளது.

# 04
# வருடாந்த நிதிக் கூற்றுக்கள் 2023

**1 நிறுவகத் தகவல்**

**1.1 அறிக்கையிடும் நிறுவகம் - முறையான சட்ட வடிவம்**

கொழும்பு பல்கலைக்கழக மனித வள அபிவிருத்தி நிறுவகம் 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்ட இலக்கம் 16 மற்றும் 1978 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்ட இலக்கம் 11 இன் கீழ் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான உயர் கல்வி நிறுவகமாகும். இந்த நிறுவகம் கொழும்பு 07, இல.275 பௌத்தலோக மாவத்தையில் நிறுவப்பட்டுள்ளது.

**1.2 பிரதான செயற்பாடுகளும் செயற்பாடுகளின் தன்மையும்.**

அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள ஊழியர்களிற்கு அவர்களின் தற்போதைய மற்றும் எதிர்கால வேலைத் தேவைகளிற்கு சிறந்த பங்களிப்பினை அளிக்கக் கூடியதான உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குதல்.

**1.3 நிதிக் காலம்**

நிறுவகத்தின் நிதிக் காலம் ஜனவரி 01, 2021முதல் டிசம்பர 31, 2021 வரையிலான பன்னிரண்டு மாத காலத்தைக் குறிக்கிறது.

**2 தயாரிப்பின் அடிப்படை**

**2.1 தயாரிப்பின் அடிப்படை**

| மாணவர் பரீட்சைக் கட்டணங்கள் - பட்டப்பின் தகைமைகள் | 10,000.00 |
| பட்டதாரி அங்கிகளுக்கான வாடகை கட்டணம் | 730,750.00 |
| திறைசேரி மசோதாவிற்கான வட்டிகள் | 607,615.82 |
| மொத்தம் | **133,553,922.16** |

குறிப்பு - 20 - செலவுக் கூற்று 2023

| கணக்கு இலக்கம் | விபரம் | தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| தனியார் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்(கல்விசார்) | | | |
| 410101-90000-P001 | சம்பளங்களும் கூலிகளும் | 8,886,612.65 | |
| 410101-90000-P002 | ஊழியர் சேமலாப நிதி | 2,263,536.64 | |
| 410101-90000-P003 | ஓய்வூதியம் | 1,219,816.74 | |
| 410101-90000-P004 | ஊழியர் நம்பிக்கை நிதி | 696,670.65 | |
| 410101-90000-P008 | கல்விசார் கொடுப்பனவுகள் | 13,576,523.93 | |
| 410101-90000-P011 | வருகை தரும் விரிவுரையாளர்கள் கட்டணம் | 1,788,672.88 | |
| 410101-90000-P012 | பணிக்கொடை | 2,664,065.93 | |
| 410101-90000-P013 | வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு | 694,200.00 | |
| 410101-90000-P015 | ஆய்வுகளுக்கான கொடுப்பனவு | 3,571,256.83 | |
| 410101-90000-P016 | விசேட கொடுப்பனவு - 15 வீதம் | 1,790,651.68 | |
| 410101-90000-P020 | மேலதிக கொடுப்பனவு | 445,000.00 | |
| 410101-90000-P021 | தொடர்பாடல் கொடுப்பனவு | 75,000.00 | |
| 410101-90000-P022 | எரிபொருள் கொடுப்பனவு | 736,745.00 | |
| 410101-90000-P023 | போக்குவரத்து கொடுப்பனவு | 600,000.00 | |
| 410101-90000-P024 | பொழுதுபோக்கு கொடுப்பனவு | 174,848.40 | |
| தனியார் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்(கல்விசாரா) | | | |
| 410102-90000-P001 | சம்பளங்களும் கூலிகளும் | 21,016,171.94 | |
| 410102-90000-P002 | ஊழியர் சேமலாப நிதி | 2,740,053.78 | |
| 410102-90000-P003 | ஓய்வூதியம் | 2,400,942.49 | |
| 410102-90000-P004 | ஊழியர் நம்பிக்கை நிதி | 942,990.73 | |
| 410102-90000-P005 | அமைத்துக் கொள்கை கொடுப்பனவு | 85,209.02 | |
| 410102-90000-P007 | மாதாந்தம் ஈடுசெய்யும் கொடுப்பனவு | 9,290,388.85 | |
| 410102-90000-P010 | ஏனைய கொடுப்பனவு | 60,000.00 | |
| 410102-90000-P012 | பணிக்கொடை | 5,302,404.84 | |
| 410102-90000-P013 | வாழ்க்கைச்செலவு | 3,808,714.84 | |
| 410102-90000-P014 | நிலுவைகள் - மாதாந்தம் ஈடுசெய்யும் கொடுப்பனவு | 164,138.89 | |
| 410102-90000-P015 | ஆய்வுகளுக்கான கொடுப்பனவு | 853,097.74 | |
| 410102-90000-P016 | விசேட கொடுப்பனவு | 4,201,686.82 | |
| 410102-90000-P017 | மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு | 1,077,322.58 | |
| 410102-90000-P020 | மேலதிக கொடுப்பனவு | 2,441,483.87 | |
| 410102-90000-P021 | தொடர்பாடல் கொடுப்பனவு | 92,000.00 | 93,660,207.72 |
| வழங்கல்கள் | | | |
| 410106-90000-P031 | எழுதுபொருள் மற்றும் அலுவலக தேவைகள் | 4,535,905.56 | |
| 410106-90000-P032 | எழுதுபொருள் மற்றும் உயவுப்பொருட்கள் | 1,348,474.49 | |
| 410106-90000-P033 | சீருடை மற்றும் தையல் கூலிகள் | 130,327.35 | |
| 410106-90000-P034 | இயந்திரம் மற்றும் மின்பொருட்கள் | 504,142.29 | |
| 410106-90000-P036 | எனைய வழங்கல்கள் | 3,470,480.72 | 9,989,330.41 |
| பராமரிப்பு | | | |
| 410107-90000-P040 | வாகனங்கள் | 2,777,651.31 | |
| 410107-90000-P041 | ஆலைஇ இயந்திரங்கள்இ உபகரணங்கள் | 2,329,795.89 | |
| 410107-90000-P043 | தளபாடங்கள் | 400.00 | |
| 410107-90000-P044 | ஏனையவைகள் | 2,048,206.77 | 7,156,053.97 |
| ஒப்பந்த சேவைகள் | | | |
| 410108-90000-P050 | போக்குவரத்து | 112,121.83 | |
| 410108-90000-P051 | தொடர்பாடல் | 866,240.66 | |
| 410108-90000-P052 | தபால்சேவைகள் | 89,105.00 | |
| 410108-90000-P053 | மின்கட்டணம் | 3,963,002.54 | |
| 410108-90000-P054 | பாதுகாப்பு சேவைகள் | 2,764,386.05 | |
| 410108-90000-P055 | நீர் கட்டணங்கள | 155,246.34 | |
| 410108-90000-P056 | துப்புரவு சேவை | 1,446,905.07 | |
| 410108-90000-P057 | வாடகை எடுத்தல்இ வாடகை கொடுத்தல் | 377,786.99 | |
| 410108-90000-P058 | உள்ளுர் அதிகாரசபைக்கான வரிமற்றும் இறைகட்டணம் | 324,324.00 | |
| 410108-90000-P059 | அச்சிடுதல் விளம்பரப்படுத்தல் | 482,823.55 | |
| 410108-90000-P060 | ஏனையவைகள் | 1,040,622.19 | 11,622,564.22 |

| | | | |
|---|---|---|---|
| **ஏனைய மீண்டு வரும் செலவினம்** | | | |
| 410109-90000-P062 | விசேட சேவைகள் முகாமைத்துவச்சபை மற்றும் குழுக்கள் | 4,385,513.60 | |
| 410109-90000-P063 | விசேட சேவைகள் - தொழில்சார்ந்தவை | 60,000.00 | |
| 410109-90000-P064 | செயலமர்வு கருத்தரங்கு | 3,482,481.37 | |
| 410109-90000-P066 | ஊழியர் மேம்பாடு | 245,000.00 | |
| 410109-90000-P067 | மாணவர்களுக்கான பாடப்பொருட்கள் | 30,000.00 | |
| 410109-90000-P068 | விடுமுறைக்கான புகையிரத சீட்டுக்கள் மற்றும் பருவகால சீட்டுக்கள் | 644,250.00 | |
| 410109-90000-P070 | வங்கிக்கட்டணங்கள் | 435.90 | |
| 410109-90000-P074 | பரீட்சைக்கட்டணங்கள் | 1,675,695.00 | |
| 410109-90000-P075 | பத்திரிகைகள் சஞ்சிகைகள் | 1,975,222.06 | |
| 410109-90000-P078 | நிறுவக நிர்வாக திட்டமிடல் | 5,000.00 | |
| 410109-90000-P079 | நலன்புரி காப்புறுதி | 1,388,685.06 | |
| 410109-90000-P084 | சொத்து கடன் மீதான வட்டி | 62,671.74 | |
| 410109-90000-P090 | அமைய ஊழியர்களின் சம்பளம் | 7,261,384.75 | |
| 410109-90000-P091 | அமைய ஊழியர்களின் சேமலாப நிதி | 1,093,174.94 | |
| 410109-90000-P092 | அமைய ஊழியர்களின் நம்பிக்கை நிதி | 273,293.64 | |
| 410109-90000-P093 | அமைய ஊழியர்களின் வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு | 2,045,494.47 | |
| 410109-90000-P094 | அமைய ஊழியர்களின் மாதாந்தம் கொடுப்பனவு | 1,311,214.48 | |
| 410109-90000-P095 | அமைய ஊழியர்களின் விசேடகொடுப்பனவு | 1,104,623.09 | 27,044,140.10 |
| **தேய்மானங்கள்** | | | |
| 420101 | காணிகள் மற்றும் கட்டடங்கள் | 4,358,937.08 | |
| 420102 | அலுவலக உபகரணங்கள் | 6,869,715.09 | |
| 420103 | நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 17,700.16 | |
| 420104 | மோட்டோர் வாகனங்கள் | 1,910,000.00 | |
| 420106 | பெயர் பலகைகள் | 89,790.68 | |
| 420107 | அங்கிகள் | 275,339.00 | |
| 420108 | தளபாடங்கள் | 1,884,295.82 | |
| 420109 | மின்சார உபகரணங்கள் | 4,101,490.09 | |
| 420110 | மென்பொருட்கள் | 386,456.34 | 19,893,724.26 |
| **மொத்தம்** | | | 169,366,020.68 |

# 05

# 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் பாகம் III இன் 17 (ஈ) உட் பிரிவின் கீழ் நிலைபேறான அபிவிருத்தியின் அடிப்படையிலான எதிர்கால எதிர்வுகூறுகை அறிக்கை - 2023

## 1. அறிமுகம்

மனித வள மேம்பாட்டு நிறுவகமானது 1979ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் கல்விச் சேவை நிறுவகம் எனும் பெயரில் நிறுவப்பட்டதோடு அது 2006 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க கட்டளைச் சட்டத்தின் ஊடாகத் திருத்தப்பட்டு. 2006 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும் 2017 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2033/10 இலக்க விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மனித வள மேம்பாட்டு நிறுவகம் பட்டங்கள், டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் கல்விசார் தகைமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஒரு நிறுவகமாக மேம்படுத்தப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவகமானது கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குரிய ஒரு கல்வி நிறுவகமாக இருப்பதனால் நிறுவகத்தின் கல்வி நடவடிக்கைகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தீவிர மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுவதுடன் சிறந்த நடைமுறைகளைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் புதிய கட்டளைச் சட்டமானது 2021 மார்ச் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் உத்தேசத் திட்டம் 2023 – 2027 ஆனது நிலைபேறான அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பாதகமான சுற்றாடல் தாக்கங்களைக் குறைத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. இவ் அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்ட இல. 19 இன் பிரிவு 17(ஈ) இன் பகுதி IIIஐ பின்பற்றி மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் முன்னுரிமைகளை மேம்படுத்துவதற்கான இலக்குகள் மற்றும் செயற்பாடுகளை விபரிக்கின்றது.

### 1.1 2023 முதல் 2027ஆம் ஆண்டு வரைக்கான மூலோபாயத் திட்டத்தின்படியான நிறுவக இலக்குகள்:

- **இலக்கு 01** உயர் கல்வியில் பங்கேற்பு மற்றும் நடுநிலையான அணுகுமுறையை விரிவாக்கல்
- **இலக்கு 02** ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவை வலுப்படுத்துதல்
- **இலக்கு 03** கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் தரம் மற்றும் அதன் தேவைகளை மேம்படுத்துதல்
- **இலக்கு 04** மனித மூலதன அபிவிருத்திச் செயன்முறைகள் மற்றும் நிர்வாக அமைப்பை மேம்படுத்துதல்
- **இலக்கு 05** பௌதீக மற்றும் நடைமுறைசார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்
- **இலக்கு 06** உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துதல்
- **இலக்கு 07** பங்குதாரர்களின் திருப்தி மற்றும் உலகளாவிய தூரநோக்கினை உறுதிப்படுத்துதல்

## 2. நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் கூடிய எதிர்காலக் கணிப்புகள

| SDG இலக்கு | **2023 இல் மனித வள மேம்பாட்டு நிறுவகத்தின் முன்னேற்றம்** |
|---|---|
| அனைத்தையும் உள்ளடக்கியதும் நியாயமானதுமான தரமான கல்வியை உறுதிப்படுத்துவதும் வாழ்நாள் முழுவதும் கற்கை வாய்ப்புக்களை மேம்படுத்துதலும். (SDG 04)<br><br> | வாழ்நாள் முழுவதும் கற்றலை ஆதரிக்கக்கூடிய புதுமையான மற்றும் உள்ளடக்க கற்பித்தல் முறைகள் மூலம் உயர்கல்விக்கு சமமான அணுகுமுறைகளை உறுதி செய்வதை மனித வள மேம்பாட்டு நிறுவகம் நோக்காகக் கொண்டது.<br><br>• 2023 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவகமானது 10 கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிற்கு அவர்களது அன்றாட செயற்பாட்டிற்கான கற்றல் முகாமைத்துவ முறைமையை (LMS) வெற்றிகரமாகப் பயன்படுத்தி உள்ளது. அந்நிகழ்ச்சித் திட்டங்களாவன: இளமாணிக்கற்கை திட்டங்கள் 01; முதுமாணிக் கற்கைத் திட்டங்கள் 04; நிர்வாக டிப்ளோமா கற்கை நெறிகள் 01; உயர் டிப்ளோமா கற்கைநெறிகள் 02; மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகள் 02.<br><br>• ஊடாடும் கற்பித்தல் மற்றும் கற்றல் BTL தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் - அனைத்து கற்கை நிகழ்ச்சித் திட்டங்களையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது நிறைவு பெற்றுள்ளது. மாணவர்களிற்கான விடய ஆய்வினை முன்வைப்பது, இயங்கலை ஊடான செயலமர்வுகள் மற்றும் வெபினர்களை நடாத்துதல் ஆகியவற்றை இது உள்ளடக்கியுள்ளது. பௌதீகப் பின்னணியில் மாத்திரமின்றி Zoom தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயங்கலை மூலமான செயலமர்வுகளின் போது மாணவர்கள் குழுக்களாகச் செயற்பட நியமிக்கப்படுகிறார்கள். இம் முறைகளின் வினைத்திறனானது அவர்களது வெற்றிகரமான செயற்பாட்டினால் காட்டப்பட்டுள்ளது.<br><br>☐ விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் கற்கை நெறிகள் என குறுகிய கால நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சித் திட்டமானது 2023 ஜுன் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக 39 மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.<br><br>☐ சேவை முகாமைத்துவ முதுமாணிக் கற்கை நெறியின் 6 மற்றும் 7 ஆம் இலக்கங்கள் மற்றும் சேவை முகாமைத்து உயர் டிப்ளோமா ஆகியவை மாணவர்களிற்காக தரவு பகுப்பாய்வு முறைமையில் SPSS மூன்று செயலமரர்வுகள் நடாத்தப்பட்டன இச் செயலமர்வுகள் மாணவர்களின் ஆய்வுச் செயற்பாடுகளிற்குத் தேவையானதும் அவர்களின் ஆராய்ச்சிக்கு முக்கியமானதுமான புள்ளிவிபரவியல் பகுப்பாய்வுத் திறனை வலுப்படுத்தும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச் செயலர்வுகள் 2023 ஜுலை 8 மற்றும் 2023 நவம்பர் 12 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெற்றன.<br><br>☐ குழு விவாதங்களை வளர்ப்பதற்கும் ஆராய்ச்சி முயற்சிகளை வழிநடத்துவதற்கும் சேவை முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணிக் கற்கைநெறியின் 2021 ஆம் ஆண்டிற்கான மாணவர்களுடன் ஒருங்கிணைந்த நான்கு முன்னணிக் குழுக் கூட்ட செயலமர்வுகளை வெற்றிகரமாக நடாத்தியது. |

| | |
|---|---|
| | ☐ ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வளவாளர்கள் இடம் பெறும் ஆராய்ச்சி எழுத்துத் தினம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வு மாணவர்களின் ஆராய்ச்சி எழுத்துத் திறனை மேம்படுத்த விலைமதிப்பற்ற நுண்அறிவுவையும் வழிகாட்டுதலையும் வழங்கியது.<br><br>☐ மனிதவள முகாமைத்துவ முதுமாணிக் கற்றைநெறி - கற்கைநெறி இலக்கம் 10/2022 மற்றும் வணிக முகாமைத்துவ முதுமாணிக் - கற்கைநெறி இலக்கம் 12/2022 மாணவர்களிற்கான கருத்திட்ட அறிக்கை முன்னேற்றத்தை முன்வைப்பது தொடர்பான செயலமர்வும் விருந்தினர் விரிவுரை அமர்வும் 2023 வைகாசி மாதம் 13,14,20 மற்றும் 21 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டன.<br><br>☐ 2023 பெப்ரவரி மாதம் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் வளாகத்தில் சேவை முகாமைத்துவ முதுமாணிக் கற்கைநெறியின் மாணவர்களிற்காக இலத்திரனியல் வளங்கள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட மூலங்களிலிருந்து இணைய வழி மூலம் கட்டுரைகளைத் தேடுதல் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை தரவிறக்கம் செய்வது தொடர்பான பெறுமதி மிக்க நுண்ணறிவை வழங்கியது.<br><br>☐ உளவள ஆலோசனை டிப்ளோமா கற்கைநெறி - 2023 மற்றும் தொழில் முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி - 2023 ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களிற்கான இலத்திரனியல் வளங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்பாடு தொடர்பாக இரு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் 2023 ஜனவரி 21 மற்றும் 2023 மே 26 ஆம் திகதிகளில் மனிதவள மேம்பாட்டு நிறுவக வளாகத்தில் அதன் சிரேஸ்ட உதவி நூலகரின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டன.<br><br>☐ ஆங்கிலம் கற்பித்தல் நிகழ்ச்சி திட்டங்களுடன் தொடர்புடைய 20 வருகைதரு விரிவுரையாளர்களின் பங்களிப்புடன் 2023 ஒக்டோபர் 28 ஆம் திகதி ரோக்ஹவுஸ் ஹோட்டலில் ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டத்திற்கான செயலமர்வு ஒன்று ஆங்கில டிப்ளோமாவிற்கான கலப்பு கற்றல், கற்பித்தல் மற்றும் பாடத்திட்ட மேம்பாடு எனும் தலைப்பில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. |

| | |
|---|---|
| அனைவருக்கும் நீடித்த, உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி முழுமையான மற்றும் வினைத்திறனான தொழில் மற்றும் ஒழுக்கமான கடமைகளை மேம்படுத்துதல்.<br>(SDG 08) | தொழில் முனைவோரை வளர்க்கும் திட்டங்கள் மற்றும் தொழில் துறையுடனான ஒத்துழைப்பு என்பன வேலை வாய்ப்பையும் பொருளாதார மீள் தன்மையையும் மேம்படுத்துகின்றது.<br>**பொதுமக்களின் பங்களிப்பிற்காக**<br>☐ சேவை முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் சேவை முகாமைத்து உயர் டிப்ளோமாவின் மாணவர்களிற்காக ஒரு நாள் நுண் நிதிப் பயிற்சி பட்டறை ஒன்று 2023 ஜூலை 02 ஆம் திகதி மனிதவள மேம்பாட்டு அபிவிருத்தி நிறுவகத்தின விரிவுரை அறையில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக 54 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர். சேவை சார்ந்த தொழில்களில் நுண்நிதி கொள்கைகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகளில் விரிவான பயிற்சியை வழங்குவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.<br>☐ களுத்துறை மாவட்டத்தில் தபால் நிலைய அதிபர்களிற்கு இடையே நடைமுறை சார்ந்த கலாச்சாரம் ஒன்றைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று 2021 ஏப்ரல் 09 ஆம் திகதி ஹொரனையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக தபால் திணைக்களத்தின் ஆளணியினர் 32 பேர் பங்குபற்றினர்.<br>☐ 2023 ஆம் ஆண்டில் மனிதவள மேம்பாட்டு நிறுவகத்திற்கு இலங்கைப் போக்குவரத்து சபையுடன் கூட்டமைப்பு ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமாக இருந்தது. இலங்கைப் போக்குவரத்து சபையின் ஆளணியினரின் சேவை சார்ந்த பயிற்சி மற்றும் கல்வியை விருத்தி செய்வதே இக்கூட்டமைப்பின் பிரதான நோக்கமாகும்.<br>☐ இலங்கை போக்குவரத்து சபையின் பிரதேச முகாமையாளர்கள் மற்றும் டிப்போ முகாமையாளர்களிற்கான நான்கு பயிற்சிப்பட்டறைகள் நவம்பர் மாதத்தில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் 300 இற்கும் அதிகமானோர் பங்குபற்றினர். பிரதேச முகாமையாளர்கள்/ டிப்போ முகாமையாளர்களிற்கான இடர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு மீள் தன்மையும், நெருக்கடி மேலாண்மையும என்பதே இப்பயிற்சிப் பட்டறையின் தலைப்பாகும்.<br>**நிறுவகத்தின் ஆளணியினரின் பங்களிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள்**<br>☐ இதன் போது அனைத்து தொழில் விபரங்களும் மீளாய்வு செய்யப்பட்டன. தொழில் விபரங்கள் இன்னமும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.<br>☐ 2023 ஜனவரி, மார்ச் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் குழுவின் மூன்று கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.<br>☐ ஆளணியினர் மூவருக்கு பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகளிற்காக ரூபா 263,500 வழங்கப்பட்டது.<br>☐ கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்யும் 80 ஊழியர்களிற்கு வழங்குவதற்காக ரூபா 400,000 பரிந்துரை செய்யப்பட்டது |

| | |
|---|---|
| நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புக்களை பாதுகாப்பான, மீள்தன்மையுடைய மற்றும் நிலையானதாக மாற்றுதல் (SDG 11) | மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் சூழல் சார்ந்த நிலையான கற்கை சூழல் ஒன்றை உருவாக்கக்கூடிய முயற்சிகள்.<br>☐ நிறுவகத்தின் நிர்வாகத்தில் பின்வரும் முறைமைகள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்றன.<br>☐ நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடுகள், ஆளணியினரின் வரவு பற்றிய பதிவேடுகள் மற்றும் பிரிவுகளின் கையிருப்பு பதிவேடுகள் என்பன இன்னமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.<br>☐ மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற அனைத்து கற்கைத் திட்டங்களிற்கும் இயங்கலை மூலமாக விண்ணப்பிக்கும் முறைமை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>☐ மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் ஊடாக நடாத்தப்படுகின்ற அனைத்து கற்கைத்திட்டங்களின் பரீட்சைகளிற்கும் இயங்கலை மூலமாக விண்ணப்பிக்கும் முறைமை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>☐ சான்றிதழ் கற்கை நெறிகளைத் தவிர அனைத்து கற்கை நெறிகளிலும் மாணவர்களிடம் ஒப்படைக்கபட்ட பணிகள் யாவும் கற்றல் மேலாண்மை அமைப்பினூடாக LMS சேகரிக்கப்படுகின்றன.<br>• **பயனர் நட்பு சூழல் ஒன்றை உருவாக்குதல் மற்றும் பேணுதல்**<br>நூலகத்தில் பயனர் நட்பு சூழலை உருவாக்கி பராமரிக்கும் செயன்முறை பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.<br>சேவை மேலாண்மை, புத்தக சேகரிப்பிலுள்ள காலாவதியான புத்தகங்களை களைந்தெடுத்தல், புத்தகங்களை வாங்குவதன் மூலமும் நன்கொடையாகப் பெறுவதன் மூலமும் சேகரிப்பை உருவாக்குதல், இரவல் கொடுக்கல் பிரிவில் புத்தகங்களின் பிரதான அடையாளங்களை மீள்வடிவமைப்பு செய்தல், வாசிப்பு பகுதிக்கு தேவையான இடத்தை பெறுதல், இலத்திரனியல் களஞ்சியத்திற்கான அணுகலை வழங்குதல், நூலக வலைப்பக்க உள்ளடக்கத்தை உருவாக்குதல் மற்றும் மீள்வடிவமைப்புச் செய்தல். புதிதாக கிடைக்கப்பெற்ற கடந்த கால ஆய்வுக் கட்டுரைகள், வினாத்தாள்கள் நூலக நூற்பட்டியல், டிஜிட்டல் களஞ்சியங்கள் மற்றும் புத்தக விற்பனை ஆகியவை குறித்து மாணவர்களிற்கு அறியத்தருதல். |

| | |
|---|---|
| கால நிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்த்துப்போராட அவசர நடவடிக்கை எடுத்தல் (SDG 13) | சக்தி சேமிப்பு முயற்சிகள், கழிவு குறைப்பு மற்றும் பேரிடர் தாக்க மதிப்பீடுகள் ஆகியவை காலநிலை உணர்வுள்ள வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கின்றன.<br>**பசுமை மற்றும் நிலையான முயற்சிகளை ஊக்குவித்தல்**<br>☐ பசுமை மற்றும் நிலையான முயற்சிகளை ஊக்குவிக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இடங்களைத் எளிதாக தொடர்புபடுத்துவதற்காக திசைகாட்டும் பலகைகளை வைத்தல் மற்றும் தரைகள், அறைகள் ஆகியவற்றை அடையாளப்படுத்துதல், குப்பைகளை முறையாக அகற்றல் மற்றும் பிரித்தல், அவ்வப்போது சுத்தம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல் (ஒவ்வொரு மூன்று மாதங்களிற்கு ஒரு முறை), நிறுவகத்தின் முன் பூச்சாடிகளை வைத்தல்.<br>**சக்தி சேமிப்பு முயற்சிகளில் முதலீடு செய்தல்**<br>☐ சக்தி சேமிப்பு செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. LED மற்றும் CFL மின் குமிழ்களைப் பாவித்தல், அச்சுப்பொறிகளின் பாவனையைக் குறைத்தல், அச்சுப்பொறிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.<br>**நிறுவகத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல்.**<br>☐ பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஊழியர்களை மதிய உணவுப் பெட்டிகளைப் பயன்படுத்த ஊக்குவித்தல், விரிவுரைகளிற்கு கண்ணாடி தண்ணீர் போத்தல்களை அறிமுகப்படுத்துதல், குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக வகைப்படுத்துதல். |
| செயற்படுத்தும் வழிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய கூட்டாண்மையை புத்துயிர் பெறச்செய்தல் (SDG 17) | உலகளாவிய ஒத்துழைப்பு பங்குதாரர் ஈடுபாடு மற்றும் முன்னாள் மாணவர் வலையமைப்புகள் என்பன மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் நிலையான வளர்ச்சிக்கான பங்களிப்பை வலுப்படுத்துகின்றன.<br>☐ முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் குறித்த நான்காவது சர்வதேச மாநாடு, 2023 நவம்பர் 24 அன்று மனிதவள மேம்பாட்டு நிறுவக வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது.<br>☐ மனிதவள மேம்பாட்டு நிறுவக சஞ்சிகையின் ஒன்பதாவது தொகுதியின் இரண்டு இதழ்களை வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br>☐ கொழும்பு தருஸ்ஸலாம் மகா வித்தியாலயம், இராஜசிங்க மகா வித்தியாலயம் மற்றும் ஹேமமாலி பாலிகா வித்தியாலய மாணவர்களிற்கு க.பொ.த(சா.த) பெறுபேறுகளில் ஆங்கில மொழி மேம்பாட்டுத் திட்டம் 2023 வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது 2023 மே 22 ஆம் திகதி மாளிகாவத்தையில் உள்ள வை.எம்.ஏ.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி திட்டத்தில் 98 மாணவர்கள் பங்கேற்றனர். |

### 3. முடிவுரை

மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் செயல்நுணுக்கத் திட்டம் 2023 – 2027 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான விரிவான அணுகுமுறையை விபரிக்கின்றது. மனிதவள மேம்பாட்டு நிறுவகம், உள்ளடக்கிய தன்மை, புத்தாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புகளிற்கு முன்னுரிமை அளித்து உயர்கல்வியில் நிலையான எதிர்காலத்தை வளர்ப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றது. இவ் எதிர்காலக் கண்ணோட்ட அறிக்கையானது, தேசிய முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்களுடன். மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் செயல் நுணுக்க சீரமைப்பை எடுத்துக்காட்டுகின்றது.

# 06

# கணக்காய்வாளர் அறிக்கை

HED/B/IHRA/2020/FA/02

திகதி: 2024 வைகாசி 30

**பணிப்பாளர்**

**மனித வள மேம்பாட்டு நிறுவகம்**

**2023 மார்கழி 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பிற சட்ட ஒழுங்குவிதித் தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2023 மார்கழி 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, உரிமை மாற்றக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதியளவான கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 மார்கழி 31 ஆம் திகதி முடிவடையும் வருடத்திற்கான நிதி கூற்றுக்களானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டு நிறுவகக் கட்டளை சட்டத்தின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு, 2018 ஆம் அண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் பிரகாரமும் எனது பணிப்புரையின் கீழும் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையானது காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் எனும் பகுதியில் விளக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர நிதிக் கூற்றுக்களில் 2023 மார்கழி 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமை ,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தரநியமம் 7 இன் 49 வது பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்த போதிலும் ஏனைய நான்கு வகையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்த போது குறிப்பிடப்பட்ட சொத்து வகையானது மீளாய்வில் உள்ள ஆண்டில்

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போது ரூபா 33,188,378 ற்குரிய செலவிற்கான சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் கற்கைநெறிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 13,632,566 உம் விண்ணப்பக் கட்டணங்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 845,900 உம் வருமானத்துடன் கணக்கு வைக்கப்படாது நேரடியாக அபிவிருத்தி நிதியத்திற்கும் தாமதகட்டண வைப்பிற்கும் வைப்பிலிடப்பட்டமையால் இவ்வாண்டின் உபரி ரூபா 14,478,466 ஆல் குறைவடைந்துள்ளது.

(இ) கற்கை நெறியிலிருந்து பெறப்பட்ட தாமதவருமானம் என ஒதுக்கப்பட்ட ரூபா 105,547,615 ஆனது துல்லியமாக சரி பார்ப்பதற்கு கற்கை நெறிகளின் கால விபரம் பற்றிய அட்டவணையானது கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 8,817,858 இல் ரூபா 33,000 மீள் மதிப்பீட்டின் போது தேய்மானமாகக் காட்டப்பட்டிருந்ததனால் அவ்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்கான உபரி குறைவாகக் காட்டப்பட்டது.

(உ) 2016 முதல் 2022 ஆம் ஆண்டுவரை மொத்தமாகப் பெறப்பட்டிருந்த தொகை ரூபா 46,474,000 ஆனது நூலக சேமிப்பாக கடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் “நூலக அபிவிருத்தி நிதியம்”என்னும் பெயரில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்நிதியம் நிறுவப்பட்டதன் நோக்கம் மற்றும் அந் நிதி பயன்படுத்தப்பட்ட முறைபற்றி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பழைய இருப்பை வருமானமாக எடுத்துக் கொள்ளும்போது திரட்டப்பட்ட உபரியை சரி செய்வதற்குப் பதிலாக நல மருத்துவ காப்பீட்டிற்கான முற்பணமான ரூபா 374,917 ஆனது மீளாய்வாண்டின் செலவாகவும் செலுத்தப்படாத மீதிப்பணமான ரூபா 124,458 ஆனது வருமானமாகவும் பதிவிடப்பட்டுள்ளது. அதன்படி அவ்வாண்டின் உபரி ரூபா 250,000 உம் மொத்த உபரி ரூபா 124,000 உம் முற்பண உபரி ரூபா 300,000 உம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(எ) நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் உபரியாக ரூபா 70,135,469 காட்டப்பட வேண்டி இருந்த போதிலும் மீண்டெழும் உபரி ரூபா 52,655,823 உம் அபிவிருத்தி நிதியத்திற்கு பரிமாற்றம் செய்யப்பட்ட ரூபா 17,479,646 உம் வெவ்வேறாகக் காட்டப்பட்டிருந்தன.

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்கீட்டு தரநியமங்களிற்கு (இ.க.த.நி) ஏற்ப மேற்கொண்டுள்ளேன். அத் தரநியமங்களின் கீழான எனது கடமைப் பொறுப்புக்களானவை மேலும் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வுப் பகுதியில் கணக்காளரின் கடமைப் பொறுப்புக்களில் விளக்கப்பட்டுள்ளது. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளானவை எனது தகுதியான அபிப்பிராயத்துக்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகின்றேன்.

### 1.1 நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் தினத்திற்கு பின்னர் எனக்கு வழங்குவதாக உத்தேசிக்கப்பட்டிருந்த நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, ஆனால் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் எனப்படும். இவ் ஏனைய தகவல் தொடர்பாக நிர்வாகமானது பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றது.

நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்ராயத்தை ஏனைய தகவல்கள் உருவாக்கவில்லை என்பதோடு அது

தொடர்பாக நான் எவ்விதத்திலுமான உறுதிப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பான எனது பொறுப்பானது மேலே அடையாளங்காணப்பட்ட ஏனைய அத் தகவல்களை அவை கிடைக்கப்பெறும் போது வாசித்தல் மற்றும் அவ்வாறு வாசிக்கும் போது அத்தகவலானது நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மை ரீதியாக பொருத்தமாக உள்ளதா அல்லது கணக்காய்வின் போது என் அறிவின் படி அல்லது வேறு வழிகளில் பெறப்பட்டதா என்பதைக் கவனத்திற் கொள்ளலாகும்.

நான் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வாசித்த பின்னர், அதில் தவறான கூற்றுக்கள் ஏதும் இருப்பதாகக் கருதினால் அதைத் திருத்துவதற்காக அது தொடர்பாக உரிய ஆளுகையைக் கொண்டவர்களுடன் கலந்துரையாட தேவைப்படுத்தப்பட்டுள்ளேன். மேலும் திருத்தப்படாத தவறான கூற்றுக்கள் இருப்பின் அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கு அமைய பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உரிய காலத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டு உள்ளடக்கப்படும்.

**1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான நிர்வாகப்பொறுப்புக்களும் ஆளுகைக்குப் பொறுப்பானவர்களும்**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தரநியமங்களிற்கேற்ப தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பிப்பதுடன் மோசடி அல்லது பிழை காரணமாக பொருள் ரீதியான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபடக்கூடிய வகையில் உள்ளக ரீதியான கட்டுப்பாட்டுடன் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நிர்வாகம் பொறுப்பாகவுள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது நிறுவகத்தின் தொடர்ந்து இயங்கும் திறன் அதனுடன் தொடர்புடைய விடயங்களை பொருந்தக் கூடிய வகையில் வெளிப்படுத்துதல், நிர்வாகத்தை கலைக்கவோ அல்லது வேறு வழியின்றி செயற்பாடுகளை நிறுத்தவோ வேண்டி ஏற்படின் நிர்வாகத்தின் கணக்குகளை தயாரிப்பதற்கு நிர்வாகமே பொறுப்பாக உள்ளது.

நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வது அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகவுள்ளது.

**1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வின் போதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

எனது குறிக்கோளானது, மோசடி அல்லது பிழை காரணமாக எந்த ஒரு தவறான கூற்றுகளிலிருந்தும் விடுபட்ட நிதிக் கூற்றுக்களிற்கான நியாயமான உறுதிப்பாடுகளைப் பெறுவதோடு எனது அபிப்ராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வின் அறிக்கையை வெளியிடுவதுமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் என்பது உறுதிப்பாட்டின் ஓர் உயர்மட்டத்திலான நிலையாக உள்ளபோதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தர நியமங்களிற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வின் போது தவறான கூற்றுகள் ஏதும் இருப்பின் அவற்றைக் கண்டறியும் என்பதற்கு அது உத்தரவாதமல்ல. மோசடிகள் மற்றும் தவறுகளினால் அறிக்கைகளில் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளின் முக்கியத்துவமானது இந்நிதி நிலை அறிக்கைகளின் அடிப்படையில் அதன் பயனாளர்கள் எடுக்கும் பொருளாதார தீர்மானங்களில் தங்கியுள்ளது.

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தர நியமங்களிற்கு கணக்காய்வின் ஒரு பகுதியாக இக் கணக்காய்வில் தொழிற்துறைத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதோடு கணக்காய்வு முழுவதிலும் தொழில் முறையான சந்தேகத்தினைப் பேணுகின்றேன். மேலும் நான்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுகளில் ஏற்படக்கூடிய கருத்து

வேறுபாடுடைய தவறான கூற்றுக்கள் ஏற்படுவதற்கான ஆபத்தை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களிற்கு ஏற்றாற் போல கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. மோசடியானது கூட்டுச்சதி, வேண்டுமென்றே தவிர்த்தல், உள்ளகக் கட்டுப்பாட்டிற்கான எல்லைகளை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்குவதனால் மோசடி மூலம் ஏற்படும் தாக்கமானது தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மைசார் தவறான கூற்றுக்களை அடையாளம் காணாமல் இருப்பதன் தாக்கத்தை விட ஆபத்தானதாகும்.

- கூட்டுத்தாபனம் மற்றும் குழுவினது உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் மீதான ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் நோக்கங்களிற்காக இல்லாதிருப்பினும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற் போன்று பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைகளை வடிவமைப்பதற்கான கணக்குடன் தொடர்புடைய உள்ளக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்காய்வுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பீடு செய்தல்.
- கணக்கீட்டின் அடிப்படையிலான மேலாண்மைத் தீர்ப்பின் பயன்பாட்டின் பொருத்தம் மற்றும் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ச்சியான நிறுவகமாகத் தொடரும் திறனில் குறிப்பிடத்தக்க சந்தேகங்களை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளுடன் தொடர்புடைய ஒரு புறநிலை நிச்சயமற்ற தன்மை உள்ளதா எனத் தீர்மானித்தல், அவ்வாறான நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நாம் முடிவுக்கு வந்தால் நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும் அல்லது அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில் எனது அபிப்பிராயத்திற்காக மாற்றி அமைத்தல் வேண்டும். இதுவரையில் பெறப்பட்ட எனது கணக்காய்வாளரின் அறிக்கையானது கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்து இயங்கும் நிலையினை நிறுத்தக்கூடும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல் மற்றும் நிதிக் கூற்றுக்கள் நியாயமான முன்வைப்பினைப் பெறக்கூடிய வகையில் பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை முன்வைக்கின்றனவா என மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது, உள்ளகக் கட்டுப்பாடிலுள்ள ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கிய கண்டுபிடிப்புக்களை, ஏனைய விடயங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ளவர்களிற்கு தெரியப்படுத்துவேன்.

## 2. ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்ராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களும் வெளிப்பாடுகளும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்கீட்டுச் சட்டத்தின் 12(அ) பிரிவீன் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப கூட்டுத்தாபனம் முறையான நிதி அறிக்கைகளை பேணிவந்திருக்கின்றது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 6 (1)(d)(iii) ஆம் பிரிவின் குறிப்பிட்ட தேவைப்பாடுகளிற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(d)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் (ஈ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானவை முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட எல்லா பரிந்துரைகளையும் உள்ளடக்குகின்றது.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய வரையறைக்குள் பின்வருவனவற்றைத் தவிர வேறு எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப நிறுவகத்தின் எவரேனும் உறுப்பினருடன் தொடர்புபட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக வணிக நோக்கங்களிற்குப் புறம்பாக நேரடியான அல்லது மறைமுகமான நலன் உள்ளதா எனக் குறிப்பிடுவதற்கும்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளிற்கு ஏற்ப ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் ஆளும் சபையினால் வெளியிடப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகள் எதற்கும் நிறுவகமானது இணங்கவில்லை எனக் குறிப்பிடுவதற்கு கீழே குறிக்கப்பட்டவற்றை தவிர வேறு எதுவும் எனது அவதானத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

| சட்டம் மற்றும் விசேட பணிப்புரைகளிற்கான குறிப்பீடுகள் | அவதானங்கள் |
|---|---|
| அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 394(இ). | மொத்தமாக ரூபா 730,395 பெறுமதியான நிராகரிக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாண கோவையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு | உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் முன் அனுமதி இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 35,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03(VIII) ஆம் பிரிவு | பிரயோகிக்கத்தக்க சுற்றறிக்கைகளின் ஆலோசனைகளிற்குப் புறம்பாக ஊழியர் நலன்புரி திட்டம் ஒன்றிற்காக செயற்படுத்தப்பட்டிருந்த சுகாதாரக் காப்புறுதி திட்டத்திற்கான ரூபா 818,000 மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது. |
| 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரியின் செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் ஐந்தாவது பந்தி | பிணையினை மீறிய பேராசிரியர் ஒருவரிடம் இருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 5,327,234ஐ அரச வருமானத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பெறுபேறுகளை வெளியிட வேண்டி இருப்பினும் தொழில் முகாமைத்துவமாணிப் பட்டத்திற்காக 2021 இலிருந்து நடைபெற்ற பரீட்சைகளிற்கான பெறுபேறுகளை வெளியிடுவதற்கு சுமார் 5 முதல் 13 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டிருந்த ஆறு சந்தர்ப்பங்கள் காணப்பட்டதோடு கணக்காய்வு தினம் வரை பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்காத ஒரு சந்தர்ப்பமும் காணப்பட்டது |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளிற்கு இணங்க நிறுவகமானது தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளிற்கு இணங்கவும் உரிய காலப்பகுதியினுள்ளும் நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் கொள்வனவு செய்யப்படாததோடு பயன்படுத்தப்படவுமில்லை.

## 2.3 ஏனைய விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதியின் போது பிணையை மீறிய உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 17,427,523 மிகுதியானது மீளாய்வாண்டினுள் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**டபிள்யு. பி. சி விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் ,இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள், பிரசட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் | முன்வைக்கும் பதில்கள் | 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை மற்றும் அபிவிருத்தி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1.2 | (அ) | நிதிக் கூற்றுக்கள் முனைப்பழியுள் ள அபிப்பிராயத்திற் கான அடிப்படை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தரநியமம் 7 இன் 49 வது பந்தியின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்த போதிலும் ஏனைய நான்கு வகையான சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்த போது குறிப்பிடப்பட்ட சொத்து வகையானது மீளாய்வில் உள்ள ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போது ரூபா 33, 188,378 ற்குரிய செலவிற்கான சொத்துக்கள் மீளாய்வு செய்யபட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டின் போது மீள் மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் | 2024 ஆம் ஆண்டில் அனைத்து சொத்து தொகுதிகளும் மீள்மதிப்பீடு செய்யப்படும் |
| | | ஆ) | | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் கற்கைநெறிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா13,632,566 உம் விண்ணப்பக் கட்டணங்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 845,900 உம் | நிறுவகத்தில் பணம் அறவிட்டு மேற்கொள்ளப்படுகின்ற கற்கை நெறிகளின் எந்தவொரு வருமானமும் பணம் அடிப்படையில் அடையாளம் காணப்படாது சம்பாதிப்பு | குறித்த வருடத்தினுள் ஆரம்பிக்கப்படுகின்ற கற்கைநெறிகளின் விண்ணப்பக் கட்டணங்களை அவ் வருடத்துக்குரிய |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | வருமானத்துடன் கணக்கு வைக்கப்படாது நேரடியாக அபிவிருத்தி நிதியத்திற்கும் தாமதகட்டண வைப்பிற்கும் வைப்பிலிடப்பட்டமையால் இவ்வாண்டின் உபரி ரூபா 14,478,466 ஆல் குறைவடைந்துள்ளது. | அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனால் அவ்விண்ணப்பக் கட்டணங்கள் தாமதமான வருமானமாக அடையாளம் காணப்பட்டு அபிவிருத்திநிதியத்திற்கு மாற்றம் செய்யப்படுவதுடன் இவ்வருமானமானது நிறுவகத்தினால் நடாத்தி முடிக்கப்பட்ட கற்கை நெறிகளில் இருந்து பெறப்பட்ட தற்போதைய இருப்பிலுள்ள மீதியாக கருதப்பட்டது. இக்கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்ற காலங்களில் அப்பணம் பெறப்பட்ட காலத்திற்கேற்ப வருமானம் எனும் வகையிலும் தாமத வருமானம் எனும் வகையிலும் நிதிக்கூற்றுக்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் உரிய காலப் பகுதியில் முடிவடைந்து இருப்பின் வரவு செலவுத்திட்ட கொள்கையின் படி வரவு செலவுத்திட்டத்திலுள்ள மிகுதிப்பணம் அபிவிருத்தி நிதியத்துக்கு மாற்றப்படும். இம் மீதிப்பணமானது 2023 ம் ஆண்டில் | வருமானமாக அடையாளம் காண்பதற்கு 2024 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கற்கை நெறிகளிலிருந்து பெறப்பட்ட பணமாக 2023 ற்குரிய நிதிநிலைக கூற்றுக்களில் காட்டப்பட முடியாது. | |
| | | இ) | | கற்கை நெறியிலிருந்து பெறப்பட்ட தாமதவருமானம் என ஒதுக்கப்பட்ட ரூபா 105,547,615 ஆனது துல்லியமாக சரி பார்ப்பதற்கு கற்கை நெறிகளின் கால விபரம் பற்றிய அட்டவணையானது கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | பின்னர் முன்வைக்கப்பட்டது. | தாமத வருமானம் பற்றிய பட்டியல் ஒன்று இவ்வருடத்தினுள் முன்வைக்கப்படும். |
| | | (ஈ) | | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 8,817,858 இல் ரூபா 33,000 மீள்மதிப்பீட்டின் போது தேய்மானமாகக் காட்டப்பட்டிருந்ததனால் அவ் வாண்டின் சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்கான உபரி குறைவாகக் காட்டப்பட்டது. | அடுத்த நிதியாண்டின் போது இவற்றை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | 2024 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| | | (உ) | | 2016 முதல் 2022 ஆம் ஆண்டுவரை மொத்தமாகப் பெறப்பட்டிருந்த தொகை ரூபா 46,474,000 ஆனது நூலக | உரிய தகவல்கள் கணக்காய்வுக்காக சமர்பிக்கப்பட்டுள்ளன. | 2024 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்களில் உரியவகையில் வெளிப்படுத்துவதற்கான |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சேமிப்பாக கடந்த வருடத்திலும் மீளாய்வாண்டிலும் "நூலக அபிவிருத்தி நிதியம்" என்னும் பெயரில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்நிதியம் நிறுவப்பட்டதன் நோக்கம் மற்றும் அந் நிதி பயன்படுத்தப்பட்ட முறை பற்றி நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| | | (ஊ) | | பழைய இருப்பை வருமானமாக எடுத்துக் கொள்ளும் திரட்டப்பட்ட உபரியை சரிசெய்வதற்குப் பதிலாக நல மருத்துவ காப்பீட்டிற்கான முற்பணமான ரூபா 374,917 ஆனது மீளாய்வாண்டில் செலவாகவும் செலுத்தப்படாத மீதிப்பணமான ரூபா 124,458 ஆனது வருமானமாகவும் பதிவிடப்பட்டுள்ளது. அதன்படி அவ்வாண்டின் உபரி ரூபா 250,000 உம் மொத்த உபரி ரூபா 124,000 உம் முற்பண உபரி ரூபா 300,000 உம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன. | அடுத்த மீளாய்வாண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | (எ) | | நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் உபரியாக ரூபா 70,135,409 காட்டப்பட வேண்டி இருந்த போதிலும் மீண்டெழும் உபரி ரூபா 52,655,823 உம் அபிவிருத்தி நிதியத்திற்கு பரிமாற்றம் செய்யப்பட்ட ரூபா 17,479 உம் வெவ்வேறாகவும் காட்டப்பட்டிருந்தன. | அடுத்த நிதியாண்டின் போது நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அபிவிருத்தி நிதியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றத்தினை குறித்த வருடத்தில் வருமானத்திலிருந்து மேற்கொள்ளபட்ட பரிமாற்றம் எனக் காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | 2.2.2 | (அ) | ஏனைய சட்டம் மற்றும் ஒழுங்கு விதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை<br><br>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி விதி முறைகள் 394 (ஈ) | நிராகரிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதியான ரூபா 730ஊ395 ஆனது நிதி விதி முறைகளின் கீழ் கையாளப்படவில்லை. | நிராகரிக்கப்பட்ட காசோலைகளை இரண்டு வருட காலத்திற்கு சேமிப்பில் வைக்கப்பட்டு அதன் பின்னர் அவை வருமானத்தில் வரவு வைக்கப்படும். | கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின்படி இப் பெறுமானங்கள் குறித்த வருடத்தின் வருமானத்திற்குள் சேர்க்கப்பட்டுள்ளது. |
| | | (ஆ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க | உரிய அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரின் முன் அனுமதி இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா | உரிய அனுமதியைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இந்நிலையான வைப்புக்கள் முதிர்ச்சி அடைந்ததன் பின்னர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நிதிச் சட்டத்தின் 11(அ) பிரிவு | 35,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன |
| | | (இ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவு திட்ட சுற்றறிக்கையின் VIII ம் பிரிவு. | மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் திரட்டப்பட்ட ரூபா 818,000 பணமானது ஊழியர்களின் நலத்திட்டத்திற்காக செயற்படுத்தப்பட்ட சுகாதார காப்பீட்டுத் திட்டத்தில் சுற்றறிக்கைக்கு முரணாக செலவிடப்பட்டது. | இவ் ஊழியர் சுகாதாரக் காப்புறுதி முறைமையானது 2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருப்பதோடு இதற்கான நிதியானது நிறுவகத்தின் சுய உருவாக்க நிதியத்தின் ஊடாக நிறுவகத்தின் நலன்புரி மற்றும் சமூகபாதுகாப்பு நிதியத்தின் கீழ் நிதிமற்றும் முகாமைத்துவ குழுக்களின் அனுமதியின் கீழ் மேற்கொள்ளப படுவதோடு இதற்காக திறைசேரியின் நிதி பயன்படுத்தப்படுவ-தில்லை. | இக் காப்புறுதி முறைமைக்கான பணமானது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியின் கீழ் செலவிடப்பட்டது. |
| | | (உ) | 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/2 1/4/2023 ஆம் இலக்க திறைசேரியின் செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் ஐந்தாவது பந்தியின் பிரகாரம் | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அறவிடப்பட்ட பிணையினை மீறிய கல்விசார் ஊழியர் (ஆசிரியர்) ஒருவரிடமிருந்து பெறப்பட்ட பணமான ரூபா 5,327,234 ஆனது அரச வருமானத்தில் வைப்புச் செய்யப்படவில்லை. | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 5/2023 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பட்டப்பின் படிப்பிற்காக அல்லது ஏழாட்டை விடுமுறையில் வெளிநாடு செல்லும் ஊழியர்களின் விமானப் பயணச்சீட்டு கட்டணத்திற்கு பிணைமீறல் மூலம் **கிடைக்**கப்பெறும் வருமானத்தின் நிதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். | பல்கலைக்கழக பிணை மீறலிலிருந்து பெறப்படும் வருமானத்தை கையாள்வதற்கான நடவடிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. |
| | | | 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் | பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டி | 2021 ஆம் ஆண்டு கொவிட் 19 பெருந்தொற்று காலப்பகுதியில் நாடுமுடக்கப்பட்டும் தனிப்பட்டவர்கள் | தற்பொழுது நடாத்தப்படும் பரீட்சைகளின் பெறுபேறுகள் தாமதமின்றி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | இருப்பினும் தொழில் முகாமைத்துவ இளமாணிப் பட்டத்திற்காக 2021 இல் நடைபெற்ற பரீட்சைகளிற்கான பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஆறு சந்தர்ப்பங்களில் சுமார் 5 முதல் 13 மாதங்கள் வரைதாமதம் ஏற்பட்டிருந்ததுடன் கணக்காய்வுதினம் வரை பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருக்காத ஒரு சந்தர்ப்பமும் காணப்பட்டது. | தனிமைப்படுத்தப்பட்டும்இருந்தமையினாலும் இவ்வாறு நடைபெற்றது. | உரியகாலத்திற்குள் வெளியிடப்படுகின்றன. |
| | 2.3 | | ஏனைய குறிப்புக்கள் | மீளாய்வாண்டின் இறுதியின் போது பிணையை மீறிய உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டி இருந்த மிகுதியான ரூபா 17,427,523 மீளாய்வாண்டினுள் அறவிடப்படவில்லை. | பிணை மீறல்களில் இருந்து கிடைக்கப்பட வேண்டிய தொகையில் 5.3 மில்லியன் தொகை இதுவரை அறவிடப் பட்டுள்ளதோடு மீதித்தொகையை அறிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | கிடைக்க இருக்கும் பணத்தின் ஒரு பகுதி 2024 ஆம் ஆண்டினுள் செலுத்தப்படவுள்ளது |